மாநகர

விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 மாசி 28 செவ்வாய்க்கிழமை (11.03.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 083




# மட்டு.உள்ளூராட்சித் தேர்தல் 56 வீதமானோர் வாக்களிப்பு

## வாக்களிப்பு சுமுகமாக நடைபெற்றது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகர சபை உட்பட ஒன்பது உள்ளூராட்சி மன்றங்களுக்கு நேற்று நடைபெற்ற வாக்களிப்பில் 56 வீத வாக்குகள் பதிவானதுடன் பெரும்பாலும் சுமுகமான வகையில் வாக்களிப்பு இடம்பெற்றதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (10 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை மீதான இந்தியத் தலையீட்டை தோல்வியடையச் செய்ய வேண்டும்

### லால் காந்த எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் வடக்குக் கிழக்கில் தமக்குச் சார்பான தமிழ் அரசியல் தலைவர்களுக்கு நிர்வாகத்தைப் பெற்றுக் கொடுத்துத் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே இந்தியா எமது நாட்டை அரசியல், கலாசார, பொருளாதார, பாதுகாப்பு ரீதியில் ஆக்கிரமிப்பதற்கு முயற்சிக்கின்றது என்று ஜே.வி.பியின் எம்.பியும் தொழிற்சங்கத் தலைவருமான கே.ரி.லால் காந்த தெரிவித்தார். (10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் 3000 குடும்பங்களை குடியமர்த்த உத்தரவு

(கொழும்பு)

யாழ்.அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் மீளக் குடியமரவும் தொழில் முயற்சியில் ஈடுபடவும் அனுமதிக்குமாறு கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராஜா மற்றும் விவசாயியான காசிப்பிள்ளை யோகேஸ்வரன் ஆகியோர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் தொடர்பான வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது முதற்கட்டமாக 3 ஆயிரம் குடும்பங்களை மீளக்குடியமர்த்துமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இம் 3 ஆயிரம் குடும்பங்களினதும் காணி உறுதிகள் பரிசீலிக்கப்பட்டு உறுதி செய்யப்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ், சட்டமா அதிபருக்கு அறிவித்திருப்பதாக அரச சட்டத்தரணி மன்றுக்குத் தெரிவித்தார். இதனை விட மேலும் 6 ஆயிரம் குடும்பங்கள் மீளக் குடியமர்வதற்காக விண்ணப்பித்துள்ளதாகவும் அவர்களது காணி உறுதிகள் யாழ்.அரச அதிபரால் பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் மனுதாரர்களின் சட்டத்தரணிகள் மன்றுக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

இதனையடுத்து (10 ஆம் பக்கம் பார்க்க)

## மின்வெட்டு நேரம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

கூல் எயர் நிறுவனத்தின் மின்பிறப்பாக்கியின் உபகரணம் ஒன்றில் ஏற்பட்ட பழுது காரணமாக மின் வெட்டு நேரத்தை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் வட மாகாண பிரதிப் பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

உயர் பாதுகாப்பு வலயமான பலாலி, காங்கேசன்துறை மற்றும் யாழ்.போதனா வைத்திய சாலை தவிர்ந்த ஏனைய இடங்களில் சுமார் 1.15 மணி நேரம் மின் வெட்டை அமுல்படுத்த வேண்டிய கட்டாய (10 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் குண்டுவெடிப்பு ஐந்து பேர் கைது

(கொழும்பு)

கொழும்பு வெள்ளவத்தை காலி வீதி யில் நேற்றுக் காலை இடம்பெற்ற குண்டு வெடிப்பையடுத்து ஐந்து பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக வெள்ள வத்தைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மங்கள தெனியா தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களிடம் தீவிர விசாரணைக்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இக் குண்டுவெடிப்புச்சம்பவம் தொடர்பாக மேலும் 40 பேரிடம் விசாரணை நடத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

வெடிக்க வைக்கப்பட்ட குண்டுப் பொதியை நேரில் கண்ட (10 ஆம் பக்கம் பார்க்க)



வெள்ளவத்தையில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் தொடர்பாக விசாரணையினை மேற்கொண்டுள்ள பொலிஸாரையும் உயிரிழந்த பொதுமகனையும் படத்தில் காணலாம்

## பிரான்ஸ் தேர்தலில் 6 தமிழர்கள் வெற்றி

(பரீஸ்)

பிரான்ஸ் மாநகரசபைத் தேர்தலில் 14 நகர சபைகளுக்கான தேர்தலில் தமிழர்கள் போட்டியிட்டனர். இதில் 6 தமிழர்கள் வெற்றிபெற்றுள்ளனர். பிரான்ஸ் தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட தமிழ் வேட்பாளர் கள் ஆறுபேரே வெற்றிபெற்றுள்ளனர்.

திருமதி வேர்ஜினி சபாரட்ணம், செல்வி சூசைப்பிள்ளை சன்டிறின் சோபியா, திருமதி நகுலேஸ்வரி அரியரட்ணம், திருமதி லீலாவதி இராஜேந்திரன், வில்லியம் ரெஜினோட் அஜந்தா, திருமதி பிரிதி நவநீதராஜு ஆகியோரே வெற்றி பெற்றுள்ளனர். (ச)

## வெள்ளவத்தையில் குண்டுவெடிப்பு ஒருவர் பலி; 4 மாணவர்கள் காயம்

(கொழும்பு)

கொழும்பில் தமிழர்கள் அதிகமாக செறிந்து வாழும் வெள்ளவத்தைப் பகுதியில் நேற்றுக் காலை 6.55 மணியளவில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் 4 பாடசாலை மாணவர்கள் உட்பட 6 பேர் காயமடைந்துள்ளனர்.

இச் சம்பவத்தில் காயமடைந்த அனைவரும் கொழும்பு களுபோவில வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். ஆரம்ப கட்ட விசாரணைகளின்படி வீதியோரத்திலிருந்த பொதிஒன்றை பிரித்துப் பார்க்க முயன்ற நபர் ஒருவரே இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் இருவர் மாணவர்கள். இருவர் மாணவிகள். இவர்களில் ஒருவரின் நிலை (10 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் நேற்றுக் கடும் மோதல் 3 படையினர் பலி; 12 பேர் காயம்

### 10 புலிகள் பலி என்கிறது படைத் தரப்பு

(கொழும்பு)

மன்னார் இலந்தைவன் பிரதேசத்தில் படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நேற்று அதிகாலை கடும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

இம் மோதல்களின் போது மூன்று இராணுவத்தினர் பலியாகியுள்ளதுடன் 12 பேர் காயமடைந்துள்ளனர். நேற்று அதிகாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற இம் மோதல்களின் போது 10 விடுதலைப்புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் பலர் காயமடைந்துள்ளதாகத் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவிக்கின்றது.

படையினரால் இலக்கு வைக்கப்பட்ட விடுதலைப்புலிகளின் இலக்குகள் மீது மேற்கொள்ளப்பட்ட (10 ஆம் பக்கம் பார்க்க)

# போலியான பீரங்கிகளைப் பயன்படுத்தி விமானப் படை மீது புலிகள் தாக்குதல்!

## சண்டே லீடர் ஆய்வில் தெரிவிப்பு

(கொழும்பு)

போலியான பல பீரங்கிகளைப் பயன் படுத்தி வான் படையினரின் விமானக் கண் காணிப்பை தமிழ விடுதலைப் புலிகள் குழப்பி வருகின்றனர் என கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில ஏடான சண்டே லீடர் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த ஏட்டின் பாதுகாப்பு பத்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளவற்றின் முக்கிய பகுதிகள் வருமாறு,

கடந்த செப்ரெம்பர் மாதம் உயிலங்குளம் சோதனைச் சாவடி மூடப்பட்டது. அதன் பின்னர் டிசம்பர் 22ஆம் திகதி படையினர் உயிலங்குளம் - ஆண்டான் குளம் வீதியை நோக்கி படை நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

அந்த வீதியிலுள்ள 2.5 கி.மீ தூரத்தை கடப்பதற்கு படையினருக்கு மூன்று மாதங்கள் எடுத்துள்ளது.

தற்போது படையினர் மேற்கு, தென் மேற்கு, தென்கிழக்கு பகுதிகளை உள்ளடக்கிய அரை வட்ட வடிவில் அடம்பன் பகுதியை முற்றுகையிட்டுள்ளனர்.

எனினும் அடர்ந்த காட்டுப்பகுதி பொறி வெடிகள் அபாயமுள்ளது. விடுதலைப் புலிகளின் தகவல்களின்படி அங்கு குறிகூட்டுப் படையணிகளையும் அவர்கள் பெருமளவில் களமிறக்கியுள்ளனர்.

இராணுவத்தினருக்கு ஆதரவாக தற்போது எம்.ஐ-24 ரகத் தாக்குதல் உலங்கு வானூர்திகள் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன.

கடந்த மார்ச் 5ஆம் திகதி நடைபெற்ற சமர்களிலும் அவை ஈடுபட்டிருந்தன. இடம் பெற்றுவரும் ஈழப்போரில் வான்படையினர் அதிக தொலைவில் பறக்கும் விமானங்களை பயன்படுத்தி விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் மற்றும் கட்டளை மையங்களை தாக்கியழிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இத்தகைய மிகையொலி விமானங்களை ஏவுகணைகள் மூலம் குறி வைப்பது கடினமாகும். எனினும் 1995ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இரு அவ்ரோ விமானங்களை விடுதலைப் புலிகள் சுட்டு வீழ்த்திய பின்னர் எம்.ஐ-24 ரக தாக்குதல் உலங்கு வானூர்திகளையும் சுட்டு வீழ்த்தியிருந்தனர்.

கடந்த ஆண்டு குடும்பிமலைப் பகுதியில் இருந்து படையினர் சாம்-14ரக விமான எதிர்ப்பு ஏவுகணை ஒன்றை கைப்பற்றி இருந்தனர்.

ரஷ்யத் தயாரிப்பான இந்த ஏவுகணை 4ஆயிரத்து 500 மீற்றர் தூரவீச்சுடையது டன் அதன் அதிகூடிய தாக்குதல் உயரம் 3ஆயிரம் மீற்றர் ஆகும்.

மனிதரால் காவிச் செல்லப்படும் இந்த ஏவுகணையின் தாக்குதல் வீச்சு அதிகரிக்கப் படக் கூடியது.

தாழ்வாகப் பறக்கும் தாக்குதல் உலங்கு விமானங்கள் மற்றும் விமானங்களை சுட்டு வீழ்த்துவதற்கு என்று இது வடிவமைக்கப்பட் டது. அதன் உந்துகணை இலக்குகளை தேடிச் சென்று தாக்கவல்லது.

### சாம் -07 ஏவுகணை

சாம் -07 ரக ஏவுகணையின் நவீன வடிவமான சாம்-14 ரக ஏவுகணை நைதரசன் குளிரூட்டப்பட்ட சல்வைற் உணர்திறன் உள்ளது.

அது வானூர்திகளின் இயந்திரப் பகுதியை தேடிச் செல்லக் கூடியது. அதிக விசாலமான கோணங்களிலும் தாக்கும் வலிமையுடைய இந்த ஏவுகணைகள் எதிர்ப்பு சாதனங்களையும் முறியடிக்கும் வல்லமையுடையது.

ஏவுகணை எதிர்ப்பு ஒளிப்பிழம்புகளின் வெப்பத்தினை உறிஞ்சும் சாதனங்களையும் உடையது. சாம் -07 ரக ஏவுகணையின் உந்துகணைகளை விட சாம்-14 ஏவுகணையின் உந்துகணையும் இருமடங்கு நிறையுடையது.

இலத்திரனியல் வழிகாட்டிகள் அதன் எடையை குறைத்துடன் திண்ம எரிபொருள் மோட்டார்களும் அதன் சிறப்பம்சங்களாகும்.

இதனிடையே தாழ்வாகப் பறக்கும் தாக்குதல் உலங்கு வானூர்திகள் சிறிய ஆயுதங்களின் தாக்குதலுக்கும் உள்ளாகக் கூடியது.

எம்.ஐ-24 ரக உலங்குவானூர்திகளை ஒத்த அமெரிக்காவின் பிளக்ஹவாக் தாக்குதல் உலங்குவானூர்திகள் சிறிய ஆயுதங்களின் மூலம் ஈராக்கிலும் சோமாலியாவிலும் சுட்டு வீழ்த்தப்பட்டிருந்தன.

எனினும் தற்போதைய நவீன எம்.ஐ-24 ரக உலங்குவானூர்திகள் மிக நவீன ஏவுகணை எதிர்ப்புச் சாதனங்களை கொண்டிருப்பது அனுகூலமானது.

எம்.ஐ.24 ரக உலங்கு வானூர்திகள் மன்னாரில் தாக்குதலில் ஈடுபட்ட போது மிகையொலி விமானங்கள் பூநகரிப் பகுதியில் தாக்குதலில் ஈடுபட்டிருந்தன. இந்தப் பகுதியில் இருந்தே விடுதலைப் புலிகள் 152 மி.மீ பீரங்கிகள் மூலம் பலாலி கூட்டுப்படைத் தளம் மீது தாக்குதலை நடத்தியிருந்தனர்.

தாக்குதலின் பின்னர் உழவு இயந்திரங்களின் உதவியுடன் பீரங்கிகளை விடுதலைப் புலிகள் நகர்த்தி விடுவதுண்டு. படையினரிடம் அவற்றினைக் கண்டறியும் சாதனங்கள் உண்டு. இந்தப் பீரங்கிகளை விடுதலைப் புலிகள் நிலத் தடி பதுங்கு குழிகளுக்குள் பாதுகாப்பாக வைப்பதுண்டு. மேலும் படையினரைக் குழப்பும் நோக்கத்துடன் போலியான பல பீரங்கிகளையும் அவர்கள் பயன்படுத்துவதுண்டு.

### 104 படையினர் பலி

இதனிடையே கடந்த மாதம் இடம்பெற்ற மோதல்களில் 104 படையினர் கொல்லப்பட்டதாகவும் 882 பேர் காயமடைந்ததாகவும் அரசு தெரிவித்துள்ளது. அவசரகாலச் சட்ட நீடிப்பின் போது அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

மேலும் 80 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் 201 பேர் காயமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் இந்த ஆண்டின் முதல் 42 நாட்களில் 180 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் 270 பேர் காயமடைந்துள்ளதாகவும் அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது. பொதுமக்களின் இறப்பைக் கருதினால் கிழமைக்கு 30 பேர் கொல்லப்படுகின்றனர்.

எனினும் அமைச்சர்களால் வெளியிடப்பட்ட தகவல்களில் இவை சேர்க்கப்படவில்லை. ஜனவரி மாதம் இடம்பெற்ற மோதல்களில் 68 படையினர் கொல்லப்பட்டதாகவும் 468 பேர் காயமடைந்ததாகவும் பிரதமர் தெரிவித்திருக்கின்றார். இந்தக் காலப்பகுதியில் 73 பொது மக்களும் கொல்லப்பட்டுள்ளதுடன் 110 பேர் காயமடைந்திருந்தனர்.

அரசின் தகவல்களின் பிரகாரம் கடந்த இரு மாதங்களில் 172 படையினர் கொல்லப்பட்டதுடன் ஆயிரத்து 300 பேர் காயமடைந்துள்ளனர். இந்தக் காலப்பகுதியில் 153 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 311 பேர் காயமடைந்துள்ளனர் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது

(ச-5)

## புத்தலவில் எட்டுப் பேர் கைது

(கொழும்பு)

புத்தல வீதியின் 52-வது மைல் கல்லை அண்மித்த கிராமங்களில் இரண்டில் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து நடாத்திய விசேட தேடுதல் நடவடிக்கையின் போது 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தங்காலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபாலி கேரகே தெரிவித்துள்ளார்.

புத்தல சல்மெல்வெவ பகுதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற கிளைமோர்க் குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக இந்த தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட 8 பேரிடமும் விசேட பொலிஸ் குழுக்கள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

(ச-2)

## பிரதான பாடநூல்கள் கிடைக்காததால் சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு தரம் 11க்கான பிரதான பாடநூல்கள் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்படவில்லை என ஆசிரியர்கள், மாணவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தரம் 11க்கான தமிழ், கணிதம், விஞ்ஞானம் மற்றும் வரலாறு ஆகிய பாடங்களிற்கான நூல்களே இவ்வாறு யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்படவில்லை என அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதேவேளை தரம் 7, தரம் 11இல் புதிய பாடத்திட்டத்திற்கான பாட நூல்கள் வந்தடைந்ததாக தெரிவிக்கப்பட்டபோதும் இப்பிரதான பாடநூல்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்து சேரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-5)

## மினிவான் விபத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தை நோக்கி வந்து கொண்டிருந்த மினிவான் ஒன்று கட்டப்பிராய்ப் பகுதியில் நேற்று விபத்துக்குள்ளானது.

நேற்றுக் காலை 10 மணியளவில் கட்டப்பிராய் மூன்றாம் கட்டைப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கட்டுப்பாட்டை இழந்த மினிவான் அப்பகுதியிலிருந்த வீட்டு மதிலை உடைத்துக் கொண்டு உட்புகுந்தது.

இதனால் வானின் கண்ணாடி நொறுங்கியது. தெய்வாதீனமாக பயணிகள் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

(ச-136)

## பல்கலை. பேரவை உறுப்பினராக ஆறு.திருமுருகன் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக பேரவை உறுப்பினராக செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பேரவை உறுப்பினராக நியமனம் பெற்றிருந்த அகில இலங்கை இந்துமாமன்றப் பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் சுகவீனம் காரணமாக பதவியை பொறுப்பேற்க முடியாதுள்ளதாக அறிவித்ததைத் தொடர்ந்து ஆறு.திருமுருகன் நியமிக்கப்பட்டுள்ளார்.

சமய மற்றும் சமூகப் பணிகளில் ஈடுபடும் இவர், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் பிரதி அதிபராக கடமையாற்றி வருகின்றார்.

(ஏ-2)

## மாகாண மட்ட மெய்வல்லுநர் போட்டிகளும் அந்தந்த மாவட்டங்களிலேயே நடக்கும்

### ஓட்டத்துக்கான வெற்றியை நேரம் தீர்மானிக்கும்

(திருகோணமலை)

வடக்கு மாகாண மாவட்ட மெய்வல்லுநர் போட்டிகளும் அந்தந்த மாவட்டங்களில் நடத்தப்பட்டு வவுனியாவில் வைத்து முடிபுகள் எடுக்கப்படவுள்ளதாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களிற்கான மெய்வல்லுநர் போட்டிகள் அந்தந்த மாவட்டங்களிலேயே நடாத்தப்பட்டு அவற்றின் முடிபுகள் வவுனியாவில் வைத்து ஒப்பிட்டு மாகாணமட்ட போட்டிகளின் முடிபுகள் எடுக்கத் திட்டமிட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இதற்கமைவாக மைதான நிகழ்வுகளான சகல பிரிவுகளிலும் அனைத்து வகையான ஓட்டங்களையும் அந்தந்த மாவட்டங்களில் நடாத்தி ஓட்ட நேரங்கள் கணிக்கப்பட்டு அதனூடாக ஒப்பிட்டு முடிபுகள் வெளியிடப்படவுள்ளது.

அத்துடன் இந்நேரக் கணிப்பாளர்களுக்கு திருகோணமலையில் வைத்து பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளதாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் தெரிவித்தார்.

மேலும் ஏனைய தடகளப் போட்டிகள் அவற்றின் விதிமுறைகளுக்கு ஏற்ப முடிவெடுக்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போதுள்ள போக்குவரத்து கட்டுப்பாடுகள் காரணமாகவே இப்புதிய முறைகள் அறிமுகப்படுத்தப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(ச-5)


## அருள்முருகன் திருமணப் பணியகம்

இல்லங்கள், நிறுவனங்களில் இருந்தும் பதிவுகளுக்கான வசதிகளை வழங்குதல், யாழ்.மாவட்ட தமிழ், இந்து, கிறிஸ்தவ அனைத்து மணமக்களதும் ஜாதகங்கள், விபரங்களை ஒன்று சேர்த்தல், இவற்றின் மூலம் திருமணங்களை இலகுவாக்கல், விரைவுபடுத்தல், நேர-கால விரயங்கள், அலைச்சல்கள், காத்திருப்புகளைத் தவிர்த்தல், பணியகத்தில் உள்ள -பணிகளில் இணைய விரும்பும் மணமக்களது திருமணங்களை சாத்தியங்களாக்குதல் என்பன உள்ளிட்ட பல நோக்குகள் கருதி பணிகளது விபரங்களும் விண்ணபப்படிவங்களும் அனுப்பி வைக்கப்படுகின்றன. வாய்ப்புகளை விரும்புவோர், மணமக்கள் விபரங்கள், தொலைபேசி இலக்கங்கள், தமது முகவரி கொண்ட 15/= ஒட்டிய 9'' x 4'' உறையினை இன்றே/விரைந்து அனுப்புவதானது பயனளிக்கக் கூடியதாகவிருக்கும். சமுகமளிக்கக்கூடியவர்கள் நேரில் வரவும்.

**அருள்முருகன் இல்லம், 03, யாழ்.வீதி ,**

சிறாம்பியடிலேன் (ஆரியகுளம், பருத்தித்துறை வீதி, பலாலி வீதிச் சந்தி லேன்), யாழ்ப்பாணம்.

இரவு 9.30 வரையிலான அழைப்புகளுக்கு 021 222 9334

(935)


## இராசிபலன்

11.03.2008
(மாசி 28, செவ்வாய்க்கிழமை)
அச்சுவினி பிற்பகல் 12.43 மணிவரை
சதுர்த்தி பிற்பகல் 04.00 மணிவரை
இராகுகாலம் 03.22 - 04.52 மணிவரை
சுபநேரம் 10.52 - 12.22 மணிவரை
சதுர்த்தி விரதம்

| | |
|---|---|
| மேடம் | கற்பனை மிகுதி, நல்ல முயற்சி, போசன சுகம், நண்பர்கள் சந்திப்பு. |
| இடபம் | காரிய அலைச்சல், பிரயாணம், சுப செலவு, உறவினர் மனஸ்தாபம். |
| மிதுனம் | எ்டுத்தகாரியம் கைகூடும், நண்பர்கள் சந்திப்பு, விருந்துபசாரம், மனஸ்தாபம். |
| கடகம் | அதிகாரம் ,நல்ல முயற்சி, உறவினர் சந்திப்பு, உற்சாகம். |
| சிங்கம் | புதிய திட்டமிடல், சரீரப் பிரயாசை, கட்டுப்பாடு, முயற்சி தாமதம். |
| கன்னி | அபகீர்த்தி, ஆரோக்கியக் குறைவு, காரிய தாமதம், பணக்குறைவு. |
| துலாம் | களஸ்திர நன்மை, காரிய சித்தி, நண்பர்கள் உதவி, விருந்துபசாரம். |
| விருச்சிகம் | தேக நலன், தடைப்பட்ட காரியம் கைகூடும், சுப நிகழ்வு, பகைவர் நேசம். |
| தனுசு | வியாபார நன்மை, அதிக செலவு, முயற்சி தாமதம், பூர்வ புண்ணிய கருமம். |
| மகரம | மாதாசுகம், சுப செலவு, காரிய தாமதம், உறவினர் வருகை. |
| கும்பம் | கூட்டு முயற்சி, அந்நியர் சந்திப்பு, பிரயாண நன்மை, பொருள் சேர்க்கை. |
| மீனம் | உணர்ச்சி வசப்படல், பணவிரயம், காரிய தாமதம், போசன சுகம். |

வளவன்

# எரிபொருள் விற்பனையை இந்தியாவுக்கு வழங்குவதற்கு எதிராக இணைந்த தொழிற்சங்கம் அடையாள வேலை நிறுத்தம்

(கொழும்பு)

இலங்கையின் எரிபொருள் விற்பனையின் ஏகபோக உரிமையை இந்தியாவிற்கு வழங்க அரசாங்கம் எடுக்கும் முயற்சியானது எமது பொருளாதாரத்தை இந்தியா ஆட்டிப் படைக்கும் நிலைமையை உருவாக்கும்.

அத்துடன் யுத்தத்தை நேரடியாக இந்தியாவின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு செல்லும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தின் இணைந்த தொழிற்சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இந் நடவடிக்கையை எதிர்த்தும் 6 கோரிக்கைகளை முன்வைத்தும் இன்று செவ்வாய்க்கிழமை ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தை மேற்கொள்ளவுள்ளதாகவும் அறிவித்துள்ளது.

இது குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இது விடயம் தொடர்பாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இணைந்த தொழிற்சங்கத்தின் அமைப்பாளர் டீ.பே.ராஜகருணா மேலும் தெரிவித்திருப்பதாவது,

இந்திய ஒயில் நிறுவனத்திற்கு (ஐ.ஓ.சி) ஏற்கனவே இலங்கையின் எரிபொருள் விற்பனையில் 30 வீதம் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தற்போது 107 எரிபொருள் விற்பனை நிலையங்கள் எமது சங்கத்தின் வற்புறுத்தலால் இதுவரை காலமும் வெளியாருக்கு விற்பனை செய்யப்படாது திறைசேரியின் வசமே உள்ளன.

இப்போது அதனையும் இந்திய நிறுவனத்திற்கு வழங்கி அந்நிறுவனத்திற்கான ஏகபோக உரிமையை 40 வீதத்திற்கும் மேலாக அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் எமது எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களை மூடிவிட வேண்டிய நிலை உருவாகும். அது மட்டுமல்லாது யுத்தம் இந்தியாவின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் வரக் கூடிய பயங்கரமான ஆபத்து நிலவுகிறது. இது நாட்டிற்கு உசிதமானதல்ல.

அதற்கு மேலாக இலங்கை மின்சார சபை, புகையிரதத் திணைக்களம், இலங்கை போக்குவரத்துச்சேவை அனைத்தும் பின்னடைவைக் காணும். எமது நாட்டின் பொருளாதார இந்தியாவிற்கு தேவையான விதத்தில் ஆட்டுவிக்கும் நிலைமை உருவாகும். இதுதான் உண்மை. ஆனால் அரசாங்கம் நாட்டின் எதிர்கால பாதுகாப்பை உறுதிப்படுத்துவதை கைவிட்டு இந்திய ஒயில் நிறுவனத்தின் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது.

திருகோணமலை – சீனன்குடாவிலுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் இயந்திரமொன்றை நிலைநிறுத்தவும் அரசாங்கம் இந்திய நிறுவனத்திற்கு அனுமதி வழங்கியுள்ளதோடு மண்ணெண்ணை வியாபாரத்திற்கும் அனுமதி வழங்கியுள்ளது. அத்தோடு விமான எரிபொருள் விற்பனையை ஆரம்பிப்பதற்கும் அதற்கான சுத்திகரிப்பு நிலையத்தை அமைக்கவும் இந்திய நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் எமது பிரதான கோரிக்கையான கப்பல்களுக்கான எரிபொருள் விற்பனையை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்பது இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை.

இலங்கை மின்சாரசபை ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பள அளவே பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் வழங்கப்படுமென அரசாங்கம் தீர்மானித்தது. 3 வருடத்திற்கு ஒருமுறை மீளாய்வு செய்யப்படுமெனவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதனை மீறிச் செயல்பட்ட போது ஊழியர் சங்கங்கள் நீதிமன்றம் சென்று இதனை தீர்ப்பதன் மூலம் உறுதிப்படுத்திக்கொண்டது.

ஆனால் 2006ஆம் ஆண்டு மின்சார சபையில் 33 வீத சம்பள உயர்வும், பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு 23 வீத சம்பள உயர்வுமே அதிகரிக்கப்பட்டன. சட்டரீதியாக கிடைக்க வேண்டிய சம்பள உயர்வு கிடைக்கப் பெறாத போதும் கூட்டுத்தாபனத்தை பாதுகாக்க அர்ப்பணிப்புடன் செயற்பட்டோம். ஆனால் எமது ஊழியர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுகையில் அரசாங்கம் இந்திய நிறுவனத்திற்கு மேலதிக இலாபத்தை பெற்றுக் கொள்ளும் விதத்தில் பெற்றோலின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

மக்களிடமிருந்து பெறப்படும் வரியை திறைசேரி பெற்றுக்கொள்ளாது அதனையும் இந்திய நிறுவனத்திற்கே தாரைவார்க்கின்றது. இதுவரையில் திறைசேரிக்கு சேரவேண்டிய 955 மில்லியன் ரூபாவை இந்திய நிறுவனம் சுருட்டிக்கொண்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளைக் கடுமையாக எதிர்த்தே இன்று செவ்வாய்க்கிழமை ஒருநாள் வேலை நிறுத்தப் போராட்டத்தையும் நண்பகல் 12.00 மணிக்கு கொலன்னாவை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முன்பாக ஆர்ப்பாட்டத்தையும் நடத்தவுள்ளோம். இவ்வாறு இணைந்த தொழிற்சங்கத்தின் அமைப்பாளர் டி.பே.ராஜகருணா தெரிவித்துள்ளார். (அ-5)

# அரசின் மனித உரிமைகள் தொடர்பான பாராளுமன்றக் குழு வெறும் கண்துடைப்பு

## ஐ.தே.க.அறிவிப்பு

சர்வதேச நாடுகளின் விமர்சனங்களிலிருந்து தப்புவதற்காகவே அரசாங்கம் மனித உரிமை தொடர்பான பாராளுமன்ற குழுவை அமைத்துள்ளது. இது வெறும் கண் துடைப்பாகும். மனித உரிமைகளை பாதுகாக்க வேண்டுமென்ற உண்மையான நோக்கம் அரசாங்கத்திற்கு இருக்குமானால் ஜனாதிபதி 17ஆம் திருத்தத்.திற்கமைய அரசியலமைப்புச் சபைகளை ஏற்படுத்த வேண்டும் என ஐ.தே.க.வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைகள் குறித்து ஐ.தே.க. வெளியிட்டுள்ள உத்தியோகபூர்வ அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கை மனித உரிமைகள் தொடர்பிலான செயற்பாடுகள் சர்வதேசத்தின் விமர்சனங்களுக்குள்ளாகியுள்ளன. இந்நிலையில் மனித உரிமைகள் தொடர்பான பாராளுமன்ற குழுவை நியமிக்க இணக்கப்பாடு காணப்பட்டுள்ளதாக அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கமோ அல்லது மனித உரிமைகள் தொடர்பான அமைச்சர் மஹிந்த சமரசிங்கவோ மனித உரிமைகளுக்கான பாராளுமன்ற குழுவை அமைப்பது தொடர்பாக எதிர்க்கட்சியான எம்முடன் பேச்சுவார்த்தைகளை நடத்தவும் இல்லை. அது தொடர்பாக அறிவிக்கப்படவுமில்லை.

இலங்கையில் பரந்தளவில் இடம்பெறும் கடத்தல்கள், காணாமல் போதல்களுக்கு இலங்கை அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டுமென்றும் இது தேசிய பிரச்சினையின் ஒரு பிரிவாகுமென்றும் ஹியூமன் ரைட்ஸ் வொட்ச் தெரிவித்துள்ளது.

அத்தோடு கௌரவமானவர்களின் சர்வதேச சுயாதீன அமைப்பு இலங்கையிலிருந்து வெளியேறியுள்ளமையும் அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்களை தோலுரித்துக் காட்டுகிறது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் சர்வதேச விமர்சனங்களிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கே மனித உரிமைகளுக்கான பாராளுமன்ற குழுவை அமைத்துள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. இது வெறும் கண்துடைப்பாகும்.

எதிர்க்கட்சிகளின் ஒருமித்த கருத்துக்களுக்கு செவிமடுத்து ஜனாதிபதி 17 ஆவது திருத்தத்திற்கமைய அரசியலமைப்பு சபைகளை நியமித்து பிரதிநிதிகளையும் நியமிக்க வேண்டும். அரசியலமைப்பு சபை மூலமே மனித உரிமை பாராளுமன்றக் குழுவுக்கு பிரதிநிதிகள் நியமிக்கப்பட வேண்டும்.

ஊழல் மற்றும் மோசடிகள் ஆணைக்குழுவின் தலைவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதால் அவ் ஆணைக்குழுவும் நியாயமாக செயற்பட முடியாதுள்ளது என்றும் ஐ.தே.க. அறிவித்துள்ளது. (அ-5)

# ஐ.நா.சபையின் அலுவலகம் இலங்கையில் அவசியமில்லை

## ஜே.வி.பி.கூறுகிறது

(கொழும்பு)

இலங்கையில் மனித உரிமைகளை ஆராய ஐ.நா.வின் அலுவலகம் அமைக்கப்



பட வேண்டிய அவசியமில்லை. அதனை எம்மால் மேற்கொள்ள முடியும். அரசாங்கம் ஐ.நா.விற்கு அடிபணிந்து இதற்கு இடமளிக்குமானால் அதனை முழு மூச்சுடன் எதிர்த்து தடுக்கும் சக்தி ஜே.வி.பி.க்கு உண்டு என அதன் பிரசாரச் செயலாளரும் எம்.பியுமான விமல் வீரவன்ச தெரிவித்தார். ஐ.நா.வின் மனித உரிமை அலுவலகம் இலங்கையில் அமைக்கப்பட வேண்டுமென்ற வலியுறுத்தல் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே விமல் வீரவன்ச எம்.பி.இதனைத் தெரிவித்தார்.

எமது நாட்டில் ஐ.நா.அலுவலகம் அமைப்பதற்கு ஒரு போதும் இடமளிக்க மாட்டோம். சர்வதேச அழுத்தங்களுக்கு அரசாங்கம் அதனை நிறைவேற்ற முயன்றால் தேசப்பற்றாளர்களை ஒன்றிணைத்து அப்பணிப்புடன் போராடி தடுத்து நிறுத்துவோம். அதற்கான பலம் மனோ திடம் ஜே.வி.பிக்கு உண்டு.

எமது நாட்டில் மனித உரிமைகள் தொடர்பாக விசாரணை செய்ய ஜனநாயக ரீதியான அரசாங்கம், மக்கள் பிரதிநிதிகள், தேசிய ஜனநாயக அமைப்புக்கள் இருக்கின்றன. எனவே அந்தப் பொறுப்பை வேறொருவருக்கு அதாவது சர்வதேச நாடுகளுக்கு வழங்க வேண்டிய அவசியம் கிடையாது. இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதாக ஐ.நா.வின் பிரதிநிதிகளான லூயிஸ் ஆர்பர் போன்றோர் அறிக்கைகளை சமர்ப்பித்து அதனூடாக இங்கு வந்து அலுவலகத்தை அமைப்பார்கள்.

இதன் பின்னர் இலங்கையில் பயங்கரமான சூழ்நிலை தோன்றுவதாக பிரசாரத்தை மேற்கொண்டு சமாதானப் படை என்ற பெயரில் ஐ.நா.ஆக்கிரமிப்பு படையை எமது நாட்டில் நிலைகொள்ளச் செய்வார்கள். பிரிவினையை ஏற்படுத்தும் நோக்கிலேயே இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

இந்த ஸ்டைலிலேயே கொசோவாவில் நேட்டோபடையினரை நிலைகொள்ளச்செய்தும் சூடானில் ஐ.நா.படையை நிலைகொள்ளச் செய்தும் பிரிவினைகளை ஏற்படுத்தினார்கள். எனவே இதற்கு ஒரு போதும் இடமளிக்க மாட்டோம். அதே வேளை இவ்விடயம் தொடர்பாக இந்தியா மௌனத்தை கடைப்பிடிக்கின்றது. அந்த மௌனம் இச் செயலுக்கு ஆதரவாக இருக்குமானால் அதனையும் எதிர்த்து போராடு வோம் என்றும் விமல் வீரவன்ச எம்.பி தெரிவித்தார். (அ-5)

# உணவுப் பொருள் கிடைக்கவில்லை இலங்கை அகதி தெரிவிப்பு

(ராமேஸ்வரம்)

இலங்கையில் மருத்துவ வசதியும், உணவுப்பொருட்களும்கிடைக்கவில்லை என இலங்கை அகதி கூறினார். ராமேஸ்வரம் துறை முக கடற்கரையில் நேற்று முன்தினம் காலை படகில் வந்திறங்கிய கிளிநொச்சியை சேர்ந்த 15 அகதிகள் இந்திய கடற்படை முகாமில் சரணடைந்தனர். விசாரணைக்கு பின் தனுஷ்கோடி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட அவர்கள்மண்டபம் முகாமிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்கள் வந்த படகையும் கடற்படையினர் பறிமுதல் செய்தனர். அகதியாக வந்த கவிதா கூறுகையில்,


இளைஞர்கள், இளம் பெண்களை புலிகள் இயக்கத்தினர் கட்டாயமாகத் துப்பாக்கி பயிற்சிக்கு அழைத்துச் செல்கின்றனர். புலிகள் இப் படி என்றால், இராணுவ கட்டுப்பாட்டு பகுதியில் இராணுவத்தினரின் அத்துமீறல்களால் அப்பாவி தமிழர்கள் கடுமையாகப் பாதிக்கப் படுகின்றனர். இலங்கைப்பிரச்சினையில், பேச்சுவார்த்தை மூலமான அமைதியான தீர்வையே நாங்கள் எதிர்பார்க்கிறோம். இலங்கையில் மருத்துவ வசதியும் உணவுப் பொருட்களும் கிடைக்க வில்லை என்றார். (அ-5)

# தமிழக மீனவர் பிரச்சினையை தீர்க்க கச்சதீவை திரும்பப் பெறவேண்டும்

## பாரதிய ஜனதா செயலாளர் திருநாவுக்கரசர்

(ராமேஸ்வரம்)

தமிழக மீனவர் பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைக்க கச்சதீவை திரும்பப்பெற



வேண்டும் என பா.ஜ. அகில இந்திய செயலாளர் திருநாவுக்கரசர் தெரிவித்தார்.

இலங்கை கடற்படையின் துப்பாக்கி சூட்டில் பலியான தங்கச்சி மடம் மீனவர் கிறிஸ்டியின் குடும்பத்துக்கு பா.ஜ. சார்பில் ரூ.10 ஆயிரம் நிதி வழங்கிய அவர் நிருபர்களிடம் கூறியதாவது, தமிழக மீனவர்களை தாக்கியும், மீன்பிடிசாதனங்களை சேதப்படுத்தியும் வந்த இலங்கைக் கடற்படையினர். மீனவர்களை சுட்டுக்கொல்வதும் தொடர்கிறது.

இலங்கையின் இச்செயலுக்கு தக்க பதிலடி கொடுக்காமல் இந்திய அரசு மௌனமாக உள்ளது. தமிழக மீனவர் பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைக்க கச்சதீவை திரும்பப் பெற வேண்டும். சேதுக்கால்வாய் திட்டத்தை மாற்றுப்பாதையில் செயல்படுத்த வேண்டும்.

இவ்விஷயத்தில் மத்திய அரசும் முறையான அறிக்கையை கோர்ட்டில் தாக்கல் செய்வில்லை. விரைவில் தேர்தல் வரப்போவதால் இத்திட்டம் இப்போதைக்கு நிறைவேறாது. அத்வானியின் தலைமையை ஏற்றுக்கொள்ளும் கட்சியுடன் கூட்டணி பற்றி பேசி முடிவு செய்யப்படும். இவ்வாறு திருநாவுக்கரசர் கூறினார். (அ-5)

## சண்டிலிப்பாய் கோட்ட மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 1.15 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கந்தசாமி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன் கலந்து கொள்கிறார்.

சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற உதவிக் கல்விப்பணிப்பாளர் வி.பாலசிங்கம் கலந்து கொள்கிறார். (ச)

## சென். நிக்கலஸ் சம்பியனானது

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்ட போட்டியின் இறுதி ஆட்டம் அண்மையில் கொழும்புத்துறை துரையப்பா மகா வித்தியாலய ஆடுகளத்தில் இடம்பெற்றபோது ஓ.எல். ஆர். விளையாட்டுக்கழக அணி அதனை எதிர்த்து ஆடிய நாவாந்துறை சென்.நிக்கலஸ் அணியை இரு நேர் செற்களில் 25-22, 25-20 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று சம்பியன் பட்டத்தை தனதாக்கிக் கொண்டது.

இவ் ஆட்டத்திற்கு எஸ்.அப்புத்துரை, கே. நாகேந்திரா ஆகியோர் நடுவர்களாக கடமையாற்றினார்கள். இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக பாடும்மீன் விளையாட்டுக் கழக தலைவர் ஈ.யேசுதாசன் கலந்துகொண்டு சிறப்பித்தார். (ஓ-110)

## ஆங்கில ஆசிரியர் பதவி

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட அலுவலகத்தினால் நடைமுறைப் படுத்தப்படவிருக்கும் ஆங்கில மொழித்திறன் விருத்தி வேலைத்திட்டத்திற்கு ஆங்கிலம் கற்பிப்பதற்கான விண்ணப்பதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

இதற்கு ஆங்கில டிப்ளோமா சான்றிதழ் அல்லது பல்கலைக்கழகத்தில் ஆங்கிலம் ஒரு பாடமாக கற்ற ஆகக் குறைந்தது 3 வருட கற்பித்தல் அனுபவம் உள்ள 21 வயதுக்கும் 55 வயதுக்கும் இடைப்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தகுதியுடையோர் விண்ணப்பப் படிவங்களை உதவி இயக்குநர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், மாவட்ட அலுவலகம் யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 24 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவி இயக்குநர் ரி. சிவதட்சணாமூர்த்தி அறிவித்துள்ளார். தொடர்புகளுக்கு தொலைபேசி இல.021-2222526. (அ-7)

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கல்விக் கோட்ட விளையாட்டுப் போட்டி இம்மாதம் 13,14ஆம் திகதிகளில் ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் பரு. கோட்டக் கல்வி அதிகாரி ப.ரகுநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கலந்து கொள்ளவுள்ளார். இம்முறை வெற்றி பெறும் வீரர் களுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஓ-19)

# நெல்லியடி ம.ம.வித்தியாலயம் ஆறு போட்டிகளில் முதலாமிடம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையே இவ் வருடத்தில் இதுவரை இடம்பெற்ற கிரிக்கெற்- திறந்த போட்டி, பூப்பந்தாட்டம் 19வயது ஆண்கள் மேசைப் பந்தாட்டம் 19 வயது ஆண்கள் மற்றும் 19 வயது பெண்கள், சதுரங்கம் 19 வயது பெண்கள் மற்றும் 15 வயது பெண்கள் ஆகிய ஆறு விளையாட்டுப் போட்டிகளில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் முதலாம் இடத்தைப் பெற்று வலயமட்ட சம்பியனானது. அத்துடன் சதுரங்கம் 19 வயது ஆண்கள், 15 வயது ஆண்கள் ஆகிய போட்டிகளில் இரண்டாமிடத்தையும் பெற்று மாவட்ட மட்டப் போட்டிகளுக்கு தெரிவாகியுள்ளதாக பாடசாலை அதிபர் எஸ்.சேதுராசா தெரிவித்துள்ளார். (அ)

# கூட்டுறவுப் பணியாளர்களுக்கு டிப்ளோமா கற்கைநெறி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த.உயர்தரத்தில் சித்திபெற்ற கூட்டுறவுப் பணியாளர்களுக்கு தேசிய கூட்டுறவு சபையுடன் யாழ். கூட்டுறவுத் திணைக்களமும் நிக்கொட்டும் இணைந்து உயர்மட்ட கல்வி டிப்ளோமா கற்கை நெறி ஒன்றை ஆரம்பித்துள்ளன.

இந்த கூட்டுறவுப் பணியாளர் உயர் மட்ட கல்வி டிப்ளோமா ஒரு வருட கால கற்கை நெறியாகும்.

இதில் யாழ்.மாவட்டத்திலுள்ள கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த 32 பணியாளர்கள் பயிற்சி பெறுகின்றனர்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வார இறுதி நாட்களில் நடைபெறும் இந்த டிப்ளோமா கற்கை நெறிக்கான விரிவுரைகளை யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விரிவுரையாளர்களும் தேசிய கூட்டுறவு சபையின் துறை சார்ந்தவர்களும் வழங்குகின்றனர். (அ-5)




# மூன்று வைத்தியசாலைகளின் பிரேத அறை திருத்தியமைப்பு

அச்சுவேலி, சாவகச்சேரி மற்றும் சங்கானை வைத்தியசாலைகளின் பிரேத அறைகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மேற்படி 3 வைத்தியசாலைகளிலும், யாழ். போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி வருகை தந்து பிரேத பரிசோதனையை மேற்கொள்வார்களாயின் அதற்கான வசதிகளை செய்து கொடுப்பதற்கு தாம் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் ஊர்காவற்றுறை வைத்தியசாலையின் பிரேத அறையும் திருத்தியமைப்பதற்கான நடவடிக்கைகளையும் தாம் விரைவில் மேற்கொள்வதாக தெரிவித்த யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அவ் வைத்தியசாலை நிர்வாகத்தினரால் பிரேத அறை திருத்தியமைக்கப்பட வேண்டுமென்ற எதுவித கோரிக்கையும் விடுக்கப்படவில்லை எனவும் கூறினார். (ச-5)

## வாகனங்களைப் பெற்றுக் கொள்ள நீதிமன்றப் பதிவாளர் அறிவித்தல்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை, நெல்லியடி மற்றும் வல்வெட்டித்துறை பொலிஸாரினால் மீட்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள் என்பன பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அவற்றின் சொந்தக்காரர்கள் உரிய ஆதாரங்களைக் காட்டி பெற்றுக் கொள்ளுமாறு நீதி மன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

உரிய முறையில் அவற்றை மீட்காதவிடத்து ஏலத்தில் விற்பனை செய்யப்படும் எனவும் அவர் கூறினார். (ச-52)

## யாழ்.கல்விப் பணிப்பாளர் கடமையைப் பொறுப்பேற்றார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளராக முன்னாள் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் நேற்று தமது கடமையைப் பொறுப்பேற்றார்.

நேற்று நண்பகல் 12 மணிக்கு தனது கடமையைப் பொறுப்பேற்ற கல்விப் பணிப்பாளர், பிற்பகல் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி பாடசாலை செயற்பாடுகளை பரிசோதனை செய்வதற்காகச் சென்றார்.

இதேவேளை அவர் யாழ்.கல்வி வலய அபிவிருத்திக் கூட்டமொன்றை நாளை கூட்டவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## இரத்தம் தேவை

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள கர்ப்பிணி நோயாளி ஒருவருக்கு 'O' நெகடிவ் ரக இரத்தம் அவசரமாகத் தேவைப்படுகிறது. இரத்தம் வழங்க வசதி உள்ளவர்கள் வழங்கியுதவுமாறு வைத்தியசாலை நிர்வாகத்தினர் அவசர கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-52)

## இரு இளைஞர்கள் கைதாகி விளக்கமறியலில்

வீதியால் சென்ற இளம் பெண் ஒருவரை கடத்திச் சென்று தகாத முறையில் நடந்து கொண்ட நான்கு இளைஞர்களில் இருவர் பருத்தித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புலோலிப் பகுதியில் வீதியால் சென்ற 19 வயதுடைய இளம் பெண் ஒருவரை நான்கு இளைஞர்கள் கடத்திச் சென்று அப்பகுதியிலுள்ள மனைப் பகுதியில் வைத்து தகாத முறையில் நடந்து கொண்டதாக் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் இரு இளைஞர்களைக் கைது செய்து பருத்தித்துறை நீதிமன்றில் நீதிவான் கே.அரியநாயகம் முன்னிலையில் ஆஜர் படுத்தினர்.

வழக்கை விசாரணை செய்த நீதிவான் குறித்த இரு இளைஞர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறும் மற்றைய இரு இளைஞர்களை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறும் உத்தரவிட்டார். (ச-52)

## தொழில் பயிலகத் திறப்பு விழா

அறவழிப் போராட்டக் குழுவும் கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவையும் இணைந்து நடாத்தும் அறவழி தொழில் பயிலகத் திறப்பு விழா எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அறவழி செயலகத்தில் அறவழிப் போராட்டக் குழுத் தலைவர் வி.ஸ்ரீ. சக்திவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

விழாவில் பிரதம விருந்தினராக, கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை, பிரதிவெளிக்களப் பணிப்பாளர் (வடக்கு) வே. ஜெயராஜசிங்கமும், கௌரவ விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இரகுநாதன் இரஞ்சிதமலர், யாழ்ப்பாணம் சிறுவர் பாதுகாப்பு நிதியத் திட்டப் பொறுப்பாளர், க. மகேந்திரன், யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர் சீ.வி.கே.சிவஞானம், சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் கே. சண்முகலிங்கம் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக சாகவகச்சேரி டிறிபேக் கல்லூரி முதல்வர் க.அருந்தவபாலன், சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் ஆர். ஜெயபாலன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர் (ஓ)

## மெய்வல்லுநர் போட்டி

இருபாலை சீ.சீ.த.க. பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் திருமதி கமலாவதி சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இவ் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்ட கல்விப் பணிப்பாளர் சி.சித்திரவடிவேலும் சிறப்பு விருந்தினர்களாக இப் பாடசாலையின் ஓய்வுபெற்ற அதிபர்களான ஐ.வேலாயுதமும் அ.இராசரத்தினமும் ஏ.எம்.ரி. ரான்ஸ்போட் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஈ.நிமலனும் கே. தங்கவடிவேல், சமாதான நீதிவானும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஓ)

## கட்டடத் திறப்பு விழா

பருத்தித்துறை கலட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலை கட்டட திறப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை அதிபர் பி. அருமைச் சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரசாங்க அதிபர் க.கணேஷ் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஓ-19)

## மரியன்னை ஆலய 125 ஆவது ஆண்டு நினைவு மலர்

பருத்தித்துறை தும்பளை புனித மரியன்னை ஆலயத்தின் 125 ஆவது ஆண்டு நினைவு மலர் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

அருட்திரு பயஸ் இருதயதாஸ் அடிகளார் தலைமையில் தும்பளை புனித மரியன்னை ஆலய முன்றலில் இம் மலர் வெளியீட்டு விழா நடைபெற்றது. பருத்தித்துறை பங்குத் தந்தை அருட்திரு ஜே.எக்ஸ்.பேனாட் அடிகளார் வரவேற்புரை நிகழ்த்தினார்.

யாழ்.பல்கலைக்கழக கிறிஸ்தவ இஸ்லாமிய நாகரீகத்துறைத் தலைவர் அருட் கலாநிதி வி.பிலேந்திரன் அடிகளார் விழாத் தலைவர் அருட்திரு பயஸ் இருதயதாஸ் அடிகளாரிடமிருந்து மலரின் முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

மலர்ப் பதிப்பாசிரியர் எஸ்.அந்தோனிமுத்து மலர் வெளியீட்டுரையை நிகழ்த்தினார். இவரின் சேவை பாராட்டப்பட்டு இவர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். சட்டத்தரணி எஸ். ரவீந்திரன், இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஸ்ரீபதி உட்பட இன்னும் பலர் உரையாற்றினர்.

திருமதி பீ. மேரிறஞ்சினி நன்றியுரை நிகழ்த்தினார். (அ-52)











கடந்த ஞாயிற்றுக்கிழமை (02.03.08) அன்று நாவலர் மண்டபத்தில் 'விழி' நிறுவனத்தால் நடாத்தப்பட்ட சான்றிதழ் வழங்கல் மற்றும் 'உளமாற' காலாண்டுச் சஞ்சிகை வெளியீட்டு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வாழ்நாள் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை உரையாற்றுவதையும், உளசார் கற்கை நெறியைப் பூர்த்தி செய்த மாணவர் ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதையும், 'உளமாற' காலாண்டுச் சஞ்சிகையின் ஆய்வுரை நிகழ்த்தும் வணக்கத்துக்குரிய பிதா அருட்தந்தை மரிய செபஸ்ரியன் அடிகளாரையும் படங்களில் காணலாம்.

முருகன் துணை







காரைநகர்- களபூமி - திக்கரை

# வள்ளி தெய்வயானை சமேத ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி திருக்கோவில்

# மண்டலாபிஷேக பூர்த்தின

# சங்காபிஷேக உற்சவ விஞ்ஞாபனம் - 2008

திருச்சிற்றம்பலம்

மூவிருமுகங்கள் போற்றி முகம்மொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற ஈராறு தோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி அன்னாள்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி

திருச்சிற்றம்பலம்

## முருகப் பெருமான் அடியார்களே,

ஈழவள நாட்டின் வடமேற் பாகத்தில் அமைந்துள்ள காரைநகரின் கிழக்குப் பகுதியில் திக்கரை என்னும் பகுதியில் கோவில்கொண்டு எழுந்தருளி தன்னை நாடிவரும் அடியார்களுக்கு அருள்மழை பொழிந்து கொண்டிருக்கும் முருகப்பெருமானுக்கும், விநாயகர் சண்முகப் பெருமான் முதலிய பரிவாரங்களுக்கும் மகா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து நடைபெற்றுவருகின்ற மண்டலாபிஷேகத்தின் பூர்த்தின சங்காபிஷேக உற்சவம் நிகழும் சர்வசித்து வருஷம் மாசிமாதம் 28ஆம் நாள் (11.03.2008) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு முருகப்பெருமானுக் கும் சண்முகப்பெருமானுக்கும் அஷ்டோத்தர சகஸ்ரசங்கா பிஷேகமும், விநாயகர், வைரவப்பெருமானுக்கும், அஷ்டோத்தர (108) சங்காபிஷேகமும் நடைபெற்று விஷேடபூசை வழிபாட்டுடன் சண்முக அர்ச்சனையும் நடை பெறும். தொடர்ந்து பிரசாதம் வழங்கல், மகேஸ்வரர் பூசை (அன்னதானம் வழங்கல்) யும் நடைபெறும்.

இரவு உற்சவம் 6.30 மணிக்கு சாயரட்சை பூசையுடன் ஆரம்பமாகி திருமுறை ஓதுதல் நிகழும், தொடர்ந்து விஷேட சொற்பொழிவு நடைபெற்று, விஷேடமங்கள வாத்தியங்கள் ஒலிக்க வசந்த மண்டப பூசையினைத் தொடர்ந்து வள்ளி தெய்வயானை சமேத முருகப்பெருமான் பூந்தண்டிகையில் எழுந்தருளி திருவீதியுலா வந்து அடியார்களுக்கு அருள்பாலிக்கும் அலங்காரக் காட்சியும் நடைபெறும். அத்தருணம் அடியார்கள் ஆசாரசீலர்களாக ஆலயத் திற்கு வருகைதந்து முருகப்பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

## கிரியைகள்

(10.03.2008) திங்கட்கிழமை பி.ப. 6.30 மணிக்கு விநாயகர் வழிபாடு, கடஸ்தாபனம், யாகபூசை, பிரசாதம் வழங்கல் நிகழும்.
(11.03.2008) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் கிரியைகள் ஆரம்பமாகி சங்காபிஷேகம் நிகழும்

**தேவஸ்தான குரு**
பிரம்மஸ்ரீ கு.சரவணபவானந்தசர்மா

**உதவிக் குருமார்கள்**
பிரம்மஸ்ரீ.சோ.கேதீஸ்வரக்குருக்கள் (கொழும்புத்துறை)
பிரம்மஸ்ரீ.ச.கணநாத சர்மா (கொழும்புத்துறை)
பிரம்மஸ்ரீ.ம.விமலேஸ்வர சர்மா (காரைநகர்)
பிரம்மஸ்ரீ.க.கிரிதர சர்மா (காரைநகர்)
பிரம்மஸ்ரீ.சு.சுஜீபர சர்மா (காரைநகர்)
பிரம்மஸ்ரீ.ச.ஷண்மதுர சர்மா (காரைநகர்)

**குருமார் விபரம்**
சிவஸ்ரீ.ச.சண்முகானந்தக்குருக்கள்(மயிலணி)
சிவஸ்ரீ. பா.பாலகிருஸ்ணக்குருக்கள் (அராலி)
சிவசிஸ்ரீ.செ.க.சிவசுப்பிரமணியக்குருக்கள் (அராலி)
சிவஸ்ரீ.சோ.வாகீஸ்வரக்குருக்கள் (கந்தரோடை)
சிவஸ்ரீ.ப.சண்முகேஸ்வரக்குருக்கள் (கோப்பாய்)

**சாதகர்கள்**
பிரம்மஸ்ரீ.எஸ்.ஜெகதீஸ்வர சர்மா (ஆனைக்கோட்டை)
பிரம்மஸ்ரீ. எஸ்.சிவபால சர்மா (இணுவில்)
பிரம்மஸ்ரீ.ப.சிவானந்த சர்மா (கோப்பாய்)
பிரம்மஸ்ரீ.கு.சற்குணராஜ சர்மா (காரைநகர்)

**ஒலி, ஒளி**
திரு.மேகவண்ணன்

**மாலை அலங்காரம்**
திரு.துஷ்யந்தன் (சங்கானை)

**ஒலி, ஒளி அமைப்பு**
திரு.மேகவண்ணன்குழுவினர் (நாச்சிமார் கோவிலடி)

**மின் இணைப்பு**
திரு.மணிவண்ணன் வட்டுக்கோட்டை

**கட்டட நிர்மாணம்**
திரு.தவபாலன் (நவாலி)

**மங்களவாத்தியம்**
திரு.சு.மந்திரமூர்த்தி குழுவினர் (காரைநகர்)

**ஆசாரி**
திருநாவுக்கரசு சண்முகவடிவேல் ரூபன்

குறிப்பு:- பால், தயிர், இளநீர், பூ, பூமாலை முதலியவற்றைத் தந்து முருகன் அருள்பெறுவீர்களாக
உற்சவத்தில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.
அன்னதானத்தில் அடியார்கள் அனைவரையும் பங்குகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இங்ஙனம்,
S.V. முருகேசு குடும்பத்தினர்.

காரைநகர், களபூமி.

(933)

# மலேசியாவின் பிரதமராக மீண்டும் பதவியேற்றார் அகமது படாவி



(கோலாலம்பூர்)

மலேசியாவின் பிரதமராக அப்துல்லா அகமது படாவி நேற்று காலை மீண்டும் பதவியேற்றுக்கொண்டார். கோலாலம்பூரில் நடைபெற்ற பாரம்பரியமிக்க வண்ணமிகு விழாவில் இரண்டாவது முறையாக படாவி பிரதமராக பதிவியேற்றார்.

மலேசிய நாடாளுமன்ற தேர்தலில் பெரும்பான்மை பெற்றுள்ள போதிலும் படாவியின் ஆளும் பாரிசான் நேஷனல் கட்சி முந்தைய தேர்தலில் பெற்ற இடங்க ளை விட குறை வான இடங் களையே பெற்றுள்ளது. மேலும் மலேசியாவில் உள்ள 13 சட்டப்பேரவை 5 சட்டப்பேரவைகளில் எதிர்க் கட்சிகள் வெற்றி பெற்றுள் ளன.

இந்த நிலையில் அப் துல்லா படாவி நேற்றுக் காலை மலேசியாவின் பிரதமராக மீண் டும் பதவியேற்றுக் கொண்டார். மலேசியாவின் மன்னர் படாவிக்கு 'பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

மலேசிய அமைச்சர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் பதவியேற்பு விழாவில் கலந்து கொண்டனர். பாரி சான் நேஷனல் கூட்டணி கடந்த 1957 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றதிலி ருந்து மலேசியாவில் தொடர்ந்து ஆட்சி நடத்தி வருவது குறிப்பிடத் தக்கது.

**டத்தோ சாமிவேலு தோல்வி**

மலேசியாவில் ஆளும் கூட்டணி மீண்டும் வெற்றிபெற்று ஆட்சியமைத்துள்ள போதிலும் இந்த தேர்தலில் மலேசியா அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த தமிழரான டத்தோ சாமிவேலு படுதோல்வி அடைந்துள்ளார். இந்தியர்கள் மலேசியாவில் பாரபட்சமாக நடத்தப்படுவதாக குற்றம்சாட்டி ஹின்ட்ராப் அமைப்பு அரசுக்கு எதிராக போராட்டம் நடத்தி வந்தது.

அமைச்சர் பதவியிலிருந்த போதும் இந்தியர்களுக்காக டத்தோ சாமிவேலு எதுவும் செய்யவில்லை என்று அவர்கள் குற்றம் சாட்டியிருந்தனர். இந்த நிலையில் தேர்தலில் டத்தோ சாமிவேலு படுதோல்வி அடைந்துள்ளார்.

இதனிடையே உள்நாட்டு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஹின்ட்ராப் அமைப்பைச் சேர்ந்த மனோகரன் என்பவர் எதிர்க்கட்சி கூட்டணி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளது குறிப்பிடத் தக்கது. (அ-5)

## வடதுருவத்துக்கு செல்லும் முதல் பெண்

(லண்டன்)

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பெண் ஹன்னா மெக்கீன்ட். 34 வயதான இவர் வட துருவத்துக்கு செல்வதற்காக கனடாவில் இருந்து புறப்படுகிறார். வட துருவத்துக்கு செல்லும் முதல் பெண் ஆவார். அவர் யாருடைய உதவியும் இல்லாமல் தனியாக செல்கிறார்.

இவர் 2006 ஆம் ஆண்டு தென்துருவத்துக்கு விமானம் மூலம் சென்றார். இப்போது வடதுருவத்துக்கு கனடாவின் வடக்குக் கடற்கரையில் இருந்து 770 கி.மீ. தொலைவில் உள்ள வடதுருவத்துக்கு செல்ல இருக்கிறார். இந்த தூரத்தை 60 நாட்களில் கடக்க திட்டமிட்டு இருக்கிறார். வடதுருவத்தில் மைனஸ் 60 டிகிரி செல்சியஸ் குளிர் இருக்கும். (அ-5)

## ஆண்கள் தான் 'நளபாக சக்ரவர்த்தி'கள்! ஆய்வு வெளியிடும் தக்வல்கள்

(லண்டன்)

சமையலில், திறமைசாலிகள் பெண்கள் தான் என்று தானே எண்ணுகிறீர்கள்; அது உண்மையல்ல... ஆண்கள் தான் 'சூப்பர் குக்!' - சமீபத்தில், பிரிட்டனில் நடத்தப் பட்ட ஆய்வில் இது தெரியவந்துள்ளது.

சமையல் அறைக்கு சொந்தக்காரர்கள் பெண்கள் தான் என்று, ஒரு பொதுவான கருத்து உள்ளது. ஆனால், அதில் உண்மையில்லை என்பது, பல நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வுகள் உறுதி செய்துள்ளன. எந்த ஒரு உணவையும் சுவையாக சமைப்பதில் ஆண்களுக்கு நிகர் ஆண்கள் தான், பெண்கள் அல்ல. அதற்காக, பெண்களை, ஆண்கள் மட்டம் தட்டுவதில்லை. சமையல் மட்டுமல்ல, எந்த ஒரு விஷயத்திலும், தனக்கு சமமான அந்தஸ்தை மனைவிக்கு தருகின்றனர் கணவர்கள். அதனால் தான், ஷாப்பிங் போகும் போதும், பொறுமையாக மனைவியின் பின்னால் காத்திருக்கின்றனர். (அ-5)

# உலக தரிசனம்

## பெனாசிர், நவாஸ் ஷெரீப் கட்சிகள் இடையே உடன்பாடு

## நீதிபதிகளை மீண்டும் பதவியில் அமர்த்தவும் முடிபு



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வது தொடர்பாக பெனாசிர், நவாஸ் ஷெரீப் கட்சிகள் இடையே நேற்று முன்தினம் உடன்பாடு உருவானது. இதன்படி பதவி நீக்கம் செய்யப்பட்ட நீதிபதிகளை மீண்டும் பதவியில் அமர்த்த இருதரப்பினரும் சம்மதித்தனர்.

**சர்தாரி - நவாஸ் பேச்சு**

பாகிஸ்தான் மக்கள் கட்சியும், நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (என்) கட்சியும் இணைந்து கூட்டணி ஆட்சி அமைக்க முடிவு செய்தன.

எனினும் சில கருத்து வேறு பாடுகள் காணப்பட்டதால் புதிய அரசு அமைவ தில் சிக்கல் நீடித்தது. இப்பிரச்சினை பற்றி பாகிஸ்தான் மக்கள் கட்சித்தலைவர் ஆசிப் அலி சர்தாரியும், நவாஸ் ஷெரீப்பும் நேற்று முரீ இடத்தில் 3 ஆவது முறையாக சந்தித்துப் பேசினர்.

நீண்ட நேர பேச்சுவார்த்தைக்குப் பின் கூட்டணி அரசு அமைப் பது தொடர்பாகவும், அதிகாரங்களை பகிர்ந்து கொள்வது பற்றியும் விரிவான ஒப்பந்தம் ஏற்பட்டது. அதில் சர்தா ரியும், நவாஸ் ஷெரீப்பும் கையெழுத்திட்டனர்.

ஒப்பந்தத்தின்படி புதிதாக அமையும் கூட்டணி அரசில் இணைய நவாஸ் ஷெரீப் சம்மதம் அளித்தார். தேர்தலில் அதிக இடங்களில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் மக்கள் கட்சிக்கு பிரதமர் பதவி ஒதுக்கப்படும். பிரதமர் பதவியை ஏற்கும் படி சர்தாரி விடுத்த வேண்டு கோளை நவாஸ் ஏற்க மறுத்துவிட்டார்.

அதேசமயம் முஷாரப்பால் பதவி நீக்கம் செய்யப்பட்ட நீதிபதிகளை மீண்டும் பதவியில் அமர்த்த வேண்டும் என்று நவாஸ் ஷெரீப் எழுப்பிய முக்கிய கோரிக்கையை சர்தாரி ஏற்றுக்கொண்டார்.

இப்பிரச்சினை தொடர் பாக பாராளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வரப்படும். அதில் அவசர நிலைப் பிரகடனம் செய்யப்படுவதற்கு 30 நாட்களுக்கு முன் நீதித்துறையில் இருந்த பழைய நிலைமையை ஏற்படுத்த வகை செய்யப்படும்.

இதன்படி முன்னாள் தலைமை நீதிபதி இப்திகார் சவுத்ரி உட்பட டிஸ்மிஸ் ஆன அனைத்து நீதிபதிகளும் மீண்டும் பதவியில் அமர்த்தப்படுவார்கள்.

இரு கட்சிகள் இடையே உடன்பாடு ஏற்பட்டதைத்தொடர்ந்து, பாகிஸ்தானில் புதிய அரசு விரைவில் பதவி ஏற்கும் என்று தெரிகி றது. (அ-5)

## பிரதமர் தெரிவில் ஏற்படும் தாமதத்தால் பெனாசிர் கட்சி பிளவுபடும் அபாயம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் நாட்டில் பெனாசிர் கட்சியின் சார்பில் பிரதமராக பதவி ஏற்கப் போவது யார் என்பதை அந்தக் கட்சி தீர்மானிக்காமல் தாமதிப்பதால், அந்தக் கட்சியின் துணைத் தலைவர் பாகிம் கோபம் அடைந் துள்ளார். இதனால் அந்தக்கட்சி பிளவுபடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் முன்னாள் பிரதமர் பெனாசிரின் மக்கள் கட்சி தான் அதிக இடங்களில் வெற்றி பெற்று மிகப் பெரிய கட்சியாக இருக்கிறது. அந்தக் கட்சி நவாஸ் ஷெரீப் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சி அமைக்க இருக்கிறது. கட்சியின் இணைத்தலைவரும், பெனாசிரின் கணவருமான ஆசிப் அலி சர்தாரி தேர்தலில் போட்டியிடாததால், வேறு ஒரு தலைவரை பிரதமராக அறிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதற்காக அந்தக் கட்சியின் துணைத் தலைவரும், பெனாசிரின் தந்தையின் கூட்டாளியாக இருந்தவருமான பாகிம் பெயர் அறிவிக்கப் பட்டது. ஆனால் அவரை பிரதமராக அறிவிப்பதற்கு இப்போது ஆசிப் அலி தயக்கம் காட்டுகிறார். கட்சியில் மூத்தவராகவும், செல்வாக்கு படைத்தவருமான பாகிமை பிரதமராக நியமித்தால், பின்னால் அவரை நீக்கிவிட்டு தான் அந்தப் பதவிக்கு வரமுடியாமல் போய்விடுமோ என்ற அச்சம் ஆசிப் அலிக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் பிரதமர் பெயரை அறிவிப்பதில் அவர் தாமதம் செய்து வருகிறார். இதனால் பாகிம் கோபம் அடைந்தார்.

அவர் நிருபர்களிடம் கூறுகையில், பிரதமர் பெயரை அறிவிப்பதில் தேவையற்ற தாமதம் காட்டப்படுவதன் காரணமாக கட்சிக்குள் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. நான் அவமானப் படுத்தப்படுவதாகவும், அலட்சியப்படுத்தப் படுவதாகவும், ஏமாற்றப்படுவதாகவும் சாதாரண மக்கள் நினைக்கிறார்கள் என்று குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது,

பெனாசிர் இறந்த 3 நாட்களுக்குப் பிறகு, சர்தாரி நிருபர்களுக்கு பேட்டி அளித்தபோது, பிரதமர் யார் என்பதைக் கட்சியின் மத்திய செயற்குழு தான் முடிவுசெய்ய வேண்டும். இருந்தாலும் பாகிம் தான் பிரதமராக பதவி ஏற்க வேண்டும் என்று பெனாசிர் விரும்பினார் என்று தெரிவித்தார்.

பெனாசிரின் மகன் பிலாவல் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் வரை கட்சி பிளவுபடாமல் பாதுகாப்பது சர்தாரியின் கடமை ஆகும். யாரோ ஒருவரை வலுக்கட்டாயமாக அவர் பிரதமராக்குவதை நான் விரும்பவில்லை. இவ்வாறு பாகிம் கூறினார்.

பிரதமர் பதவியை உங்களுக்கு கொடுக்காவிட்டால் என்ன செய்வீர்கள் என்று நிருபர்கள் கேட்டபோது, என்ன செய்யவேண்டும் என்ற திட்டம் என் மனதில் இருக்கிறது. அதை இப்போது நான் சொல்லமாட்டேன். பிரதமர் பெயரை அறிவித்த பிறகு நான் வெளியிடுவேன் என்று பாகிம் கூறினார்.

இதற்கிடையில் ஜனநாயக மீட்புக்கான எதிர்க்கட்சிகளின் கூட்டணி கூட்டத்தை பாகிம் கூட்டி இருந்தார். இந்த அமைப்பின் தலைவராக பாகிம் இருக்கிறார்.

இந்தக் கூட்டம் பற்றி எனக்கு முன்கூட்டியே பாகிம் தெரிவிக்கவில்லை. இதனால் இந்தக் கூட்டத்தில் நான் கலந்துகொள்ள மாட்டேன் என்று சர்தாரி அறிவித்திருந்தார். இதனால் இந்த தலைவர்களுக்கு இடையே மோதல் ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து மக்கள் கட்சி தலைவர்கள் சிலர் தலையிட்டு இருவருக்கும் இடையே மோதல் ஏற்படும் நிலையைத் தடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். இந்த முயற்சி காரணமாக ஜனநாயக மீட்பு கூட்டணி கூட்டத்தை பாகிம் தள்ளிவைத்தார்.

இந்தக் கூட்டம் மட்டும் நடந்திருந்தால். அதில் கலந்துகொண்டவர்கள் பிரதமர் பதவிக்கு பாகிமுக்கு ஆதரவு கொடுத்திருப்பார்கள். அது இரு தலைவர்களுக்கும் இடையே பெரும் பிளவு ஏற்பட்டு இருக்கும் என்று அந்தக் கட்சியின் பிரமுகர் ஒருவர் கூறினார். (அ-5)

## ஐரோப்பிய சரக்கு ராக்கெட் விண்ணில் செலுத்தப்பட்டது

(பாரீஸ்)

ஐரோப்பாவின் முதல் ராக்கெட் விண்ணில் செலுத்தப்பட்டது. அரியானே என்ற அந்த ராக்கெட் சரக்கு விண்கலத்தை சுமந்து கொண்டு பூமியின் சுற்றுப்பாதையில் சேர்க்கப்பட்டது. சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு தேவையான 9 டன் சரக்குகளை அது கொண்டு சேர்ப்பதற்காக அனுப்பப்பட்டது.

அரியானே-5 என்ற ராக்கெட் தென் அமெரிக்காவின் வடகிழக்கு கடலோரத்தில் உள்ள பிரஞ்சு கயானாவில் உள்ள கோரூ என்ற இடத்தில் இருந்து அது கடந்த சனிக்கிழமை நள்ளிரவு 1.03 மணிக்கு விண்ணில் செலுத்தப்பட்டது. புறப்பட்ட ஒரு மணி நேரத்தில் ராக்கெட்டில் இருந்து விண்கலம் பிரிந்தது. இது ஏற்றி சென்ற விண்கலம் ஜூலஸ் வெர்னே ஆகும்.

இது பிரஞ்சு அறிவியல் எழுத் தாளர் பெயர் ஆகும். அவரது நினைவாக இந்தப் பெயர் விண்கலத்துக்கு சூட்டப்பட்டது. இந்த விண்கலத்தில் விண்வெளிவீரர்கள் யாரும் அனுப்பப்படவில்லை.


இது பார்க்கிங் சுற்றுப்பாதையில் காத்திருக்கும். அடுத்த மாதம் 3 ஆம் திகதி தான் அது சர்வதேச விண்வெளி நிலையத்துடன் இணையும். (அ-5)

## ஒலிம்பிக் போட்டியை குழப்புவதற்கு திட்டமிட்ட 17 தீவிரவாதிகள் கைது

ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி வருகிற ஆகஸ்ட் மாதம் சீனாவில் உள்ள பீஜிங் நகரில் தொடங்குகிறது. போட்டியில் கலந்து கொள்ள மற்றும் பார்வையிட இலட்சக் கணக்கானோர் வருவார்கள். எனவே தீவிரவாத காப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அல்கொய்தா மற்றும் உள்ளூர் தீவிர வாதிகள் போட்டியை சீர்குலைக்கலாம் என்று கருதி கண்காணிப்பு பணிகள் நடந்து வருகி றது.

சீனாவில் உள்ள ஹின் ஜியாங் பகுதியில் உய்க்குர் என்ற தீவிரவாத இயக்கம் செயல்பட்டு வருகிறது. அவர்கள் போட்டிகளை சீர்குலைக்க சதித்திட்டம் தீட்டி இருந்ததைக் கண்டுபிடித்தனர். அவர்களில் 15 பேரை பொலிஸார் கைது செய்தனர். இன்னொரு இடத்தில் 2 தீவிரவாதிகளை கைது செய்தனர். அவர்கள் விமானத்தை கடத்தி கட்டடங்களில் மோத திட்டமிட்டு இருந்தது தெரிய வந்தது. இன்னொரு வேட்டையில் 2 தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். (அ-5)

# லேசிக் லேசர் சிகிச்சை பாதுகாப்பானது



மனிதர்களின் விலைமதிக்க முடியாத சொத்துகளில் கண்ணிற்கு பிரதான இடம் உண்டு. வரலாறு, பலவற்றை பதிவு செய்வதாலும் அதை அடுத்த தலைமுறையினர், அதே போல் புரிந்துகொள்ள உதவுவதில் கண்ணின் பங்களிப்பு அதிகம். இன்று பல தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களின் கண்டுபிடிப்புக்கு ஆதாரமே கண்கள் தான்.

அத்தகைய கண்ணை, அது தரும் பார்வையை, நாம் பறிபோகவிடலாமா? கண் பார்வையை பாதுகாக்க என்ன செய்யவேண்டும்? நமக்கு தோன்றும் இந்த வினாவை சென்னையில் இயங்கிவரும் உமா கண் மருத்துவமனையின் தலைமை மருத்துவர் அருள் மொழி வர்மன் முன்வைத்துள்ள

**■ கண் தொடர்பான அனைத்து சிக்கல்களுக்கும் ஆங்கில மருத்துவ முறையில் தான் சிறந்த சிகிச்சை அளிக்கப்பட்டு வருகி றதா? அல்லது வேறுமுறையிலும் சிகிச்சை அளிக்கப்படுகிறதா?**

கண்களை பொறுத்தவரையில் கண்புரை என்கிற கற்றாக்ட் 'க்ளுக்கோமா', 'டய பெடிக் ரெடினோபதி' இவைகள் தான் பெரும்பான்மையானோரை தாக்குகிறது. குழந்தைகளுக்கு ஏற்படும் மாறுகண், அறுவை சிகிச்சை அல்லது இடைவிடாத பயிற்சி மூலமே பூரண குணமடைகிறது. கண்ணாடி, கொன்ராக்ற் லென்ஸ், லேசர் ஆகிய மூன்று சிகிச்சை முறைகளையும் பரிந்துரை செய்வது ஆங்கில மருத்துவமே.

வயது மூப்பால் ஏற்படும் கற்றாக்டின் ஆரம்ப நிலையைக் கடந்த டயபெடிக் ரெடினோபதி மருந்துகளால் குணப்படுத்த இயலாத க்ளுக்கோமா என்பற்றை அறுவைச் சிகிச்சை மூலமே குணப்படுத்த இயலும்.

அறுவைச் சிகிச்சையை ஆங்கில மருத்துவம் மட்டுமே மேற்கொள்வதால் கண் தொடர்பான அனைத்துப் பிரச்சினைகளுக்கும் சரியான தீர்வை அலோபதி மட்டுமே வழங்குகிறது. சிலர் யோகாமுறையில் கண்பார்வை திறனை மீட்டெடுக்க முடியும் என்கிறார்கள். இதில் மிகக் குறைந்த புள்ளியான 5மற்றும் 0.75 ஆகிய புள்ளி நிலைகளில் இருந்தால் மட்டும் மிகச் சிறிய அளவிலானவர்களுக்கு குணமாக்கலாம்.

**■ வாழ்நாள் முழுவதும் இருபாலாரும் கண்ணாடி அணியாமல் இருக்க முடியாதா?**

சாத்தியமில்லை நம் தெற்காசியாவில் 15 வயதிற்குட்பட்டவர்களுக்கு பார்வைக் கோளாறு இருந்ததால் அவர்களில் 15 சதவீதத்தினரே கண்ணாடி அணிகிறார்கள். மற்றவர்களில் பெரும்பாலானோர் சிகிச்சையை மேற்கொள்ளாமல் இருக்கிறார்கள். ஆனால் நாற்பது வயதைக் கடந்த 90 சதவீதத்தினருக்கு வெள்ளெழுத்து எனப்படும் பார்வைக் குறைபாடு ஏற்படும். இதற்குரிய சிகிச்சையை தவறாமல் எடுக்க வேண்டும்.

தவறினால் பார்வைக் கோளாறு ஏற்படும்.




அதேபோல் கற்றாக்ட் என்பது ஒரு வியாதி அல்ல. முதுமையால் ஏற்படும் பார்வைக் குறைபாடு தான் இதை சரி செய்யலாம்.

**■ கண் தொடர்பாக எந்தவித விழிப்புணர்வு ஏற்பட வேண்டும் என்று எண்ணுகிறீர்கள்?**

வருடத்துக்குஒருமுறைகண்களைஅவசியம் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். அதிலும் நாற்பது வயதைத் தாண்டிவிட்டால் கட்டாயமாக கண் பரிசோதனை செய்து கொள்ளவேண்டும்.

அதற்காக கண்ணாடி கடைக்காரரிடம் சென்றுபரிசோதனைசெய்து கொள்ளாதீர்கள். கண் மருத்துவரிடம் சென்று ஆலோசனை பெறுங்கள்.

**■ எம் மாதிரியான பார் வைக் குறைபாடுகளுக்கு அதற்குரிய அறிகுறி தெரியாது?**

'க்ளுக்கோமா', 'டயபெடிக் ரெடினோ பதி' இதற்கு ஆரம்பகட்ட அறி குறிகள் தெரியாது.

பொது வாக இவை வருவதற்கு பெற்றோர்களின் பரம்பரையும் ஒரு காரண மாகும்.

**■ கண்களை காத்துக் கொள்வதற்கான எளிய வழி?**

ஒரு விடயத்தை குறிப்பிட விரும்புகிறேன். கண் தன்னைத்தானே பாதுகாத்துக்கொள்ளும். நாம் தான் அதற்கு கூடுதல் பணி அளித்து சோர்வடையச் செய்கிறோம்.

கால நிலை மாற்றங்களால் கண் தொடர்பான நோய்கள் பரவும் போது கூலிங்கிளாஸ் அணிந்து கண்களைப் பாதுகாக்கலாம்.

**■ பெண்கள் கண்ணாடி அணிவதால் சில தடைகளும், அசௌகரியங்கள் ஏற்படுகின்றன. இதனை அகற்ற வழிகிடையாதா?**

இதற்கு நவீன மருத்துவ முறையான 'சையாப்டிக்ஸ்' என்ற லேசிக் லேசர் சிகிச்சை பாதுகாப்பானது. பதினெட்டு வயது நிரம்பிய இருபாலாருக்கும் இந்த சிகிச் சையை செய்யலாம். பத்து நிமிடத்தில் முடிந் துவிடும். பக்க விளைவுகள் இல்லை. சிகிச்சைக்கு பின்னர் மீண்டும் கண் ணாடி அணியவேண்டிய தேவையில்லை..

மேலும் இந்த சிகிச்சையில் 'மைக்ரோ கீரோம்' என்ற கத்தியை பயன்படுத்தாமல் இன்டராலேஸ் லேசிக் முறையில் லேசர் மூலமே கருவிழி கையாளப்படுவதால் பாதுகாப்பானது.

**■ மைனஸ் 20க்கு கீழ் பார்வைக் குறைபாடு உடையவர்களுக்கும் லேசிக் மூலம் சிகிச்சை வழங்கி குணப்படுத்த இயலுமா?**

இந்தக் குறைபாடு உடையவர்களுக்கு தற்போது பேகிக் ஐ.ஓ.எல் என்ற சிகிச்சை மூலம் கண்ணுக்குள் லென்ஸ் பொருத்தப்படுவதால் அவர்கள் சிகிச்சைக்குப் பிறகு கண் ணாடி அணியத் தேவையில்லை.

அதிகமாக பார்வைக் குறைபாடு (பவர்) உள்ளவர்களுக்கு இந்த முறையிலான சிகிச்சை ஒரு வரப்பிரசாதமாகும்.



சையாப்டிக்ஸ் கருவி

**■ வயதானவர்களுக்கு ஏற்படும் பார்வைக் குறைபாட்டிற்கு உரிய சிகிச்சை எது?**

நாற்பது வயதைக் கடந்துவிட்ட அனைவரும் கிட்ட பார்வைக்கு கண்ணாடி அணிய வேண்டிய கட்டாயம் இருக்கிறது. இதற்கு தற்போது பிரிலெக்ஸ் என்ற நவீன சிகிச்சை மூலம் கண்ணுக்குள் 'மல்டி போகல் லென்ஸ்' பொருத்தப்படுகிறது. இதனால் கண்ணாடி அணிய வேண்டிய அவசியம் தவிர்க்கப்படுகிறது. தூரப் பார்வை மற்றும் கிட்டப் பார்வையை தெளிவாக காணமுடிகிறது.

**■ கற்றாக்கிற்கு எம்மாதிரியான நவீன சிகிச்சை பயன்படுத்தப்படுகிறது?**

இதற்கு தற்போது 'சாவரின்' என்ற நவீன கருவி மூலம் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இந்த அறுவைச் சிகிச்சைக்குப் பின் மல்டி போகல் லென்சினை கண்ணுக்குள் பொருத்தி விடுவதால் வயதானவர்கள் கூட இளமையானவர்களை போல் பார்வையைப் பெற முடியும்.

# லேசர் சிகிச்சையில் பக்கவிளைவுகள் குறைவு



லேசர் சிகிச்சை நிபுணர்:
லலிதா சுரேஷ்

ஒவ்வொரு மனிதனை யும் மற்றவர்களிடமிருந்து வேறு படுத்தி அடையாளப்படுத்துவது முகம். ஒவ்வொரு மனிதனின் கட்டை விரல் ரேகையும் ஒரே மாதிரி இருக்காது என்கிறது தடய அறிவியல் மருத்துவத்துறை. இருப் பினும் முகத்திற்குத் தான் அதிக முக்கியத் துவம் தருகிறார்கள். ஏனெனில் இளமை மற்றும் முதுமைக் காலத்தில் ஏற்படும் மாற்றங்களை முகம் பிரதிபலித்தாலும், எளிதில் உள்வாங்கி நினைவில் வைத்துக் கொள்ள முடியும் என்பது நிரூபிக்கப்பட்ட உண்மை.

'வயிறு காய்ந்தாலும் முகம் காயக் கூடாது' என்ற பழமொழி நெடுங்காலமாக நம் மக்களிடையே நிலவி வருகிறது. இந்தளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்த முகம், மற்வர்களால் விரும்பப்படாமல், இருந்தால்... அதன் வலி அனுபவிப்பவர்களுக்கு தான் தெரியும். இதற்கு தீர்வாக மருத்துவம் தந்துள்ள சிகிச்சை தான் லேசர் சிகிச்சை. இந்நிலையில் இத்துறையில் பல வருட அனுபவம் பெற்றுள்ள நிபுணரும், சென்னையில் இயங்கி வரும் 'சாட்டின் ஸகின்' என்ற நிறுவனத்தின் இயக்குநருமான திருமதி லலிதா அவர்களை சந்தித்தோம்.

**■ மற்ற சிகிச்சை முறைகளிலிருந்து லேசர் சிகிச்சை எப்படி வேறுபடுகிறது? அதன் தனிச்சிறப்பம்சம் என்ன?**

லேசர் சிகிச்சை பாதுகாப்பானது. சுலபமானது. குறைவான நேரத்தை செலவிட்டால் போதுமானது. குறிப்பாக பக்க விளைவுகள் இல்லை. பெண்களும், ஆண்களும் தங்கள் உடலில் இருக்கும் தேவையற்ற ரோமங்களை முற்றிலுமாக அகற்ற லேசர் சிகிச்சை தான் சரியானது என்று எண்ணுகிறார்கள்.

**■ லேசர் சிகிச்சை எப்போது அவசியம் என்று பரிந்துரை செய்வீர்கள்?**

தேவையற்ற ரோமங்கள், முகச் சுருக்கம், இளமையான தோற்றப்பொலிவு, அறுவைச் சிகிச்சை, தீக்காயம் மற்றும் விபத்துக்கள் மூலம் ஏற்படும் தழும்புகள், பெண்களின் வயிற்றுப் பகுதியில் பிரசவத்தால் உண்டா கும் சுருக்கங்கள், சூரிய ஒளியால் பாதிக்கப்பட்ட தோல்கள் என்பவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சரியான தீர்வாக லேசர் சிகிச்சையைத்தான் வலியுறுத்து வோம். ஆனால், பதினான்கு வயதிற்குட்பட்டவர்கள், கருத்தரித்தவர்கள் மற்றும் தலைமுடி நரைத்திருப்பவர்கள் ஆகியவர்களுக்கு நாங் கள் இந்த சிகிச்சையை பரிந்துரை செய்வதில்லை.

**■ சிலபெண்களுக்குமட்டும் முகத்தில் ரோமம் வளர்வதற்கு காரணம் என்ன?**

பெண்களின் உடலில் சில ஹார்மோன்கள் சுரப்பதில் முரண்பாடுகள் ஏற்பட்டால் அதன் விளைவாகத்தான் பெண்களுக்கு முகத்தில் விரும்பத்தகாத முறையில் ரோமங்கள் வளர்கின்றன. இதற்கு மருத்துவத்துறை 'ஹார்மோன் இம்பேலன்ஸ்' என்று குறிப்பிடுகிறது. இன்றும் சிலருக்கு தைரொய்டு குறைவாலும் இது நிகமும். வேறு சில பெண்களுக்கு 'பாலிஸ்டிக் ஓவரியன்' பிரச்சினையாலும் ரோம வளர்ச்சி ஏற்படு கிறது.

**■ இந்த சிகிச்சை முறையில் பக்க விளை வுகள் ஏற்பட வாய்ப்புண்டா?**

முதலில் எங்களிடம் வருபவர்களின் தோலை பரிசோதனை செய்துவிட்டு, அவர்களிடம் லேசர் சிகிச்சையைப் பற்றி விளக்கிவிட்டு, அவர்களின் ஒப்புதலைப் பெற்ற பின்னர், சிகிச்சைக்கான லேசர் கதிரின் அளவை முடிவு செய்வோம்.

மிக குறைவான சக்தி கொண்டது முதல், ஆறு விதமான அளவில் லேசரை செலுத்தி சிகிச்சையளிக்க முடியும். ஒவ்வொருவரின் ரோம அடர்த்தி, தோலின் தன்மை ஆகியவற்றிற்கேற்ப சிகிச்சை அளிக்கப்படுகிறது. தற்போது தெற்காசியப் பகுதி மக்களின் தோலிற்கேற்ப லேசர் சிகிச்சை இயந்திரங்கள் விசேடமாக தயாரிக்கப்படுகிறது. அதனால் லேசர் சிகிச்சை செய்து கொள்வதற்கு பயப்பட தேவையில்லை. 1064 நானோ மீற்றர்கள் அளவுள்ள லேசரால் சிகிச்சை அளிக்கப்பட்டதால் தான் பக்க விளைவுகள் ஏற்படாது என்பது குறிப்பிடத்தக்கது.




**■ லேசர் சிகிச்சையைஒருமுறை எடுத்துக்கொண்டால் போதுமானதா?**

இதுபோன்ற உறுதியை யாராலும் தர இயலாது. மேலும் லேசர் கதிர்களை பயன்படுத்தி பகுதி பகுதியாகத்தான் ரோமங் களை நீக்க இயலும். ஒவ்வொரு ரோமங்களுக்கும் மூன்று விதமான நிலைகள்உண்டு.

அனஜின் என்று சொல்லப்படும் வளர்ச்சிநிலை. டெலஜின் என்று குறிப்பிடப்படும் வளர்ச்சியற்ற தேக்க நிலை. கேடஜின்எனப்படும் இவை இரண் டுக்கும் இடைப்பட்ட நிலை. ஒவ்வொரு ரோமத்திற்கும் இந்த மூன்று நிலைகளும் சுழற்சி முறையில் தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கும். இந் நிலையில் லேசர் சிகிச்சையில் அனஜின் எனப்படும் வளர்ச்சியில் இருக்கும் ரோமங்களை மட்டுமே அகற்ற முடியும். அதிலும் ஒரே முறையில் அகற்ற இயலாது. ஆறுமுதல் எட்டு முறை செய்ய வேண்டியிருக்கும்.



சிகிச்சைக்கு முன்



சிகிச்சைக்கு பின்

**■ ஒரு பெண் அழகாக தோற்றமளிக்க வேண்டும் என்றால் எத்தனை மாதம் சிகிச்சை எடுத்தால் போதுமானது?**

பொதுவாக நம் ஊரில் ஒரு பெண்ணிற்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டவுடன் தான் அழகு பற்றிய எண்ணம் வரும்.

அதனால் நாங்கள் தரும் பயனுள்ள ஆலோசனை என்னவென் றால், திருமண திகதிக்கு முன் இரண்டு மாத அளவிற்குள் எங்களை நாடினால் அவர் களை அழகாக்க முடியும். அதற்கு குறைவான கால அளவுகளில் (திருமணத்திற்கு நான்கு தினங்கள் முன்) வந்தால் கூட இந்த சிகிச்சை அளிக்க இயலும்.

ஆனால் வாக்சிங், திரெட் டிங் போன்றவற்றை மேற்கொள்ளும் முன் நன்கு பரிசிலீக்க வேண்டும்.

**■ தாங்கள் எதற்கெல்லாம் சிகிச்சை அளிக்கிறீர்கள்?**

பிளாஸ்டிக்சர்ஜரியால்ஏற்பட்டவடுக்களுக்கு, முடி உதிர்வதை தடை செய்வதற்கு. தோல் உதிர்வதை தடைசெய்வதற்கு, தோல் மினுமினுப்பாக இருப்பதற்கு, குறிப்பிட்ட அளவில் இளமையாக தோற்றமளிப்பதற்கு, இப்படி சிலவற்றிற்கு விசேடமாகவும் சிகிச்சை அளிக்கிறோம்.

# இந்திய அணியின் வெற்றிக்கு செப்பலின் ஆலோசனையே காரணம்


## டீன் ஜோன்ஸ் சொல்கிறார்

(சிட்னி)

அவுஸ்திரேலிய முத்தரப்புத் தொடரில் இந் திய அணிவெற்றி பெற்ற மைக்கு அவ் அணி யின் முன்னாள் பயிற்றுவிப்பாளர் செப்பல் வழங்கிய ஆலோசனையே காரண மென கிரிக் கெற் விமர்சகர் டீன் ஜோன்ஸ் தெரி வித்துள்ளார். அவுஸ்திரேலிய கிரிக்கெற் அணி முன்னாள் வீரர் டீன்ஜோன்ஸ் அளித்த ஒரு பேட்டியில் கூறியிருப்பதாவது,

இந்திய அணியில் இளம் வீரர்களை புறக் கணித்தால் வெற்றிபெற இயலாது என்றும் இளம் வீரர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும் முன்னாள் பயிற்சியாளர் செப்பல் நீண்ட நாட்களாக வலியுறுத்தி வந்தார். அவரது கருத்தை பிற்பற்றி இளம் ரத்தம் பாய்ச்சியதாலே இந்திய அணி தற்போது அவுஸ்தி ரேலியாவுக்கு நடைபெற்ற முத்தரப்பு ஒரு நாள் தொடரில் அபாரமாக ஆடி வெற்றி பெற்றுள்ளது.

இதற்கு என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இளம் வீரர்களை புறக்கணித்தால் வெற்றிபெற முடியாது என்று செப்பல் எடுத்து கூறியது தற் போது உண் மை யா கி யு ள் ளது. இந்திய அணி மேற் கொண்ட மாற் றமேஅதன்வெற் றிக்கு காரண மாகும். எனவே செப்பலுக்கு இந் திய கிரிக்கெற் சபை நன்றிக் கடன் பட்டுள் ளது. நான் இவ்



வாறு சொல்வது சிலருக்கு அதிர்ச் சியை தர லாம் என அவர் கூறியுள்ளார். (5)

# எனது வாழ்க்கையில் திருப்பு முனை ஏற்படுத்திய 9 ஓவர்கள் - இஷாந்த்

(புதுடில்லி)

எனது கிரிக்கெற் வாழ்க்கையில் 9 ஓவர் கள் திருப்பு முனையை ஏற்படுத்தியது என்று இந்திய பந்து வீச்சாளர் இஷாந் சர்மா கூறி யுள்ளார். இந்திய கிரிக்கெற் அணியின் புதிய புயல் வேகப்பந்து வீச்சாளர் 19 வயதான இஷாந்த் சர்மா டெல்லியை சேர்ந்தவர். ஏ.சி. மெக் கானிக்கின் மகனான இஷாந்த் அவுஸ் திரேலியாவில் டெஸ்ட் தொடரின் பிற்பகுதியி லும், முத்தரப்பு ஒருநாள் போட்டித் தொடரிலும் அமர்க்களப் படுத்தினார்.

முத்தரப்பு போட்டியில் மட்டும் 14 விக்கெற் றுக்களை கைப்பற்றினார். இவரது பந்து வீச் சில் அவுஸ்திரேலிய அணித்தலைவர் பொன் டிங் அதிகமாக திணறினார். இஷாந்தை வெகு வாக பாராட்டிய பொன்டிங் மிகவும் அபாய கரமான பந்துவீச்சாளர் என்று சொன்னார். அவுஸ்திரேலிய முன்னாள் அணித்தலைவர் ஸ்டீவோக் இந்திய கிரிக்கெற் அணிக்கு கிடைத்த அடுத்த அருமையான வீரர் என்று புகழ்ந்தார். 6 அடி 4 அங்குலம் உயரம் கொண்ட இஷாந்த் உயரத்துக்கு ஏற்ப, பந்து வீச்சி லும் உயர்ந்த நிலையில் இருக்கிறார்.

இந்த நிலையில் தனது கிரிக்கெற் வாழ்க் கையில் திருப்பு முனை ஏற்படுத்தியது 54 பந் துகள் தான் என்று அவர் ருசிகர தகவலை வெளியிட்டிருக்கிறார். டெல்லியில் நிகழ்ச்சி ஒன்றில் அவர் கூறுகையில்,

இந்தியா-அவுஸ்திரேலியா இடையே பேர்த் தில் நடந்த டெஸ்ட் போட்டியில், அவுஸ்திரேலிய அணித்தலைவர் பொன்டிங்குக்கு 9 ஓவர்கள் பந்து வீசி அவரை ஆட்டம் இழக்கச் செய்தது எனக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தாகும். இது தான் எனது வாழ்க்கையில் திருப்பு முனையாக அமைந்தது. இந்த அவுஸ்தி ரேலிய சுற்றுப் பயணம் எனக்கு மிகவும் முக்கி யமானதாகும். அது எனது ஒட்டுமொத்த வாழ்க் கையே மாற்றிவிட்டது என்றார் இஷாந்த். (5)




பீஜிங்கில் நடந்த ஹொக்கிப் போட்டியில் ஆடும் வாய்ப்பை இழந்தது இந்தியா. ஒலிம்பிக் தகுதி சுற்றுவிளையாட்டுபோட்டி சாண்டியாகோவில் நடந்தது. இதற்கான இறுதி போட்டியில் இங்கிலாந்துடன் இந்தியாமோதி யது. இதில் இங்கிலாந்து 2:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. இதனால்இந்தியாஒலிம் பிக் ஹொக்கிபோட்டியில்விளை யாடும் தகுதியை இழந்தது. கவ லையுடன் இந்திய வீரர்கள்.

# பெங்களூர் ஓபன் டென்னிஸில் செரீனா வில்லியம்ஸ் 'சம்பியன்'

(பெங்களூர்)

பெங்களூர் ஓபன் டென்னிஸ் போட்டியில் ஷிண்டரை வீழ்த்தி அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லி யம்ஸ் மகுடம் சூட்டினார்.



### செரீனா சம்பியன்

முன்னணி வீராங்கனைகள் பங்கேற்ற 'பெங்களூர் ஓபன்' சர்வதேசடென்னிஸ்போட்டி பெங்களூ ரில் நடந்தது. அரை இறுதியில் தனது அக்கா வீனசை போராடி தோற்கடித்த அமெரிக்காவின் செரீனா வில்லி யம்ஸ் நேற்று முன்தினம் இறுதிப் போட்டியில் சுவிட்சர்லாந் தின் பட்டி ஷிண்டரை சந்தித்தார். ஆரம்பம் முதலே ஆட்டத்தில் சூடு பறந்தது.

நிரம்பி வழிந்த ரசிகர்கள் கூட்டம் அவர் களை உற்சாகப்படுத்தினார்கள். முதல் செட் டில் இரண்டு பேரிடையே கடும் சவால் காணப் பட்டது. இறுதியில் அந்த செட்டை செரீனா தன் வசப்படுத்தினார். வாழ்வா, சாவா நிலையில் 2ஆவது செட்டை எதிர்கொண்ட ஷிண்டர் அதில் 3-1 என்ற கணக்கில் முன்னிலை பெற் றார். ஆனால் அதன் பிறகு செரீ னாவின் அதிரடி தாக்குதலில், ஈடு கொடுக்க முடியாமல் வரிசை யாக கேம்களை கோட்டை விட்டார். இத னால் இந்த செட்டையும் தன தாக் கிய செரீனா 7-5, 6-3 என்ற நேர் செட்கணக்கில் வெற்றி பெற்று 'சம்பியன்' பட்டத்தை கைப்பற்றி னார்.

இந்த ஆட்டம் 83 நிமிடங்கள் நடந்தது. செரீனாவின் அசுரத் தனமான 'சேர்வீஸ்' களை முறி யடித்து திரும்புவதில் வெகுவாக தடுமாற்றம் கண்ட ஷிண்டருக்கு அதனால் பெரும் பின் னடைவு ஏற்பட்டது. செரீனா 7 'ஏஸ்களை' வீசியது குறிப்பிடத்தக்கது.

### ரூ.38 லட்சம் பரிசு

ஒற்றையர் பிரிவில் செரீனா கைப்பற்றிய 29வதுபட்டம் இதுவாகும். மேலும்கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் நடந்த மியாமி போட்டிக்கு பிறகு வென்ற முதல் பட்டமாகவும் அவருக்கு இது அமைந்தது. வெற்றி பெற்ற செரீனாவுக்கு ரூ.38 லட் சம் பரிசுத்தொகையாக கிடைத்தது. மேலும், இந்த வெற்றியின் மூலம் 300 தர வரிசை புள்ளிகளும் பெற்றார். (5)

# ஆஸி.தொடர் பற்றி பேச ஹர்பஜனுக்கு வாய்ப்பூட்டு

(மும்பை)

இந்திய கிரிக்கெற் அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங், அவுஸ்திரேலிய சுற் றுப்பயணத்தில் நிறைய சர்ச்சைகளை சந்தித் தார். முத்தரப்பு போட்டியில் வெற்றியுடன் திரும்புகையில், அவுஸ்திரேலிய வீரர்கள் ஹைடனை மிகப்பெரிய பொய்யர் என்றும் கில்கிறிஸ்ட் களத்தில் ஒன்றும் ஜோக்கியமான வர் கிடையாது என்றும் அவர் அங்குள்ள பத் திரிகைக்கு சொன்னதாக செய்திகள் வெளியா யின. இதனை ஹர்பஜன் சிங் திட்டவட்டமாக மறுத்தார்.

இருப்பினும் ஹர்பஜன்சிங் மீது நடவ டிக்கை எடுக்க கோரி, அவுஸ்திரேலிய கிரிக் கெற் சபை இந்திய கிரிக்கெற் சபைக்கு உடன டியாக கடிதம் எழுதியது.

அதில் நடந்தது எல்லாம் போதும் ஹர் பஜன்சிங் இனி மேலும் எதுவும் கிளற மாட்டார் என்று (நீங்கள் இந்திய சபை) உறுதி அளித் தும் அவர் நினைத் தபடி எல்லாம் பேசிக் கொண் டிருக்கிறார். இதற்கு எப் போது தான் முடிபு? இது பற்றி அவரி டம் உங்களால் பேசமுடியுமா? என்று கடிதத் தில் அவுஸ் திரேலிய கிரிக் கெற் சபை தலைமை நிர்




வாகி சுதர்லாண்ட் காரசாரமாக குறிப்பிட்டு இருந்தார்.

இந் நிலையில் இந்த பிரச்சினை குறித்து இந்திய கிரிக்கெற் சபை செயலாளர் நிரஞ்சன் ஷாவிடம் நேற்று முன்தினம் கேட்ட போது 'அவுஸ்திரேலிய கிரிக்கெற் சபையிடம் இருந்து ஹர்பஜன்சிங் பற்றி இ-மெயிலில் கடிதம் வந்தது உண்மைதான்.

இதையடுத்து, இனி அவுஸ்திரேலிய தொடர் பற்றி பத்திரிகைகளிடம் எதுவும் பேசக் கூடாது என்று ஹர்பஜன்சிங்கிடம் கூறியிருக் கிறோம். அவரும் அதை ஏற்றுக் கொண்டு இருக்கிறார்' என்றார்.

# ஓராண்டில் 1300 ஓட்டங்கள் குவித்தும் ஒருநாள் அணியிலிருந்து நீக்கி விட்டனர்

## இதனைவிட என்ன செய்ய வேண்டுமென கங்குலி புலம்பல்

(மும்பை)

ஓராண்டில் சுமார் ஆயிரத்து 300 ஓட்டங் கள் குவித்தும் இந்திய ஒருநாள் போட்டி அணி யில் இருந்து நீக்கிவிட்டார்கள். இதைவிட அணியில் இடம்பெற என்ன தேவை என்று எனக்கு தெரியவில்லை என்று கங்குலி வேத னையுடன் கூறியுள்ளார்.

### கங்குலி நீக்கம்

இந்திய கிரிக்கெற் அணியின் முன்னாள் அணித்தலைவர் சௌரவ் கங்குலி மீண்டும் ஒருநாள் போட்டி அணியில் இடம்பிடிக்க போராடி வருகிறார். 15 மாத இடைவெளிக்கு பிறகு கடந்த ஆண்டு ஜனவரி மாதம் மீண்டும் ஒருநாள் போட்டி அணிக்கு திரும்பிய கங்குலி அது முதல் துடுப்பாட்டத்தில் அபாரமாக செயல்பட்டு வந்தார். ஆனால் அவுஸ்திரேலி யாவில் நடந்த முத்தரப்பு ஒருநாள் போட்டித் தொடரில் கங்குலிக்கு திடீரென கல்தா கொடுக் கப்பட்டது. மூத்த வீரரான கங்குலிக்கு களத்த டுப்பு செய்வதில் குறைபாடு இருப்பதால் கழற்றி விடப்பட்டதாகத் தகவல்கள் வெளியாயின. கடந்த ஆண்டு மட்டும் அவர் ஒருநாள் போட்டி யில் 32 ஆட்டத்தில் ஆயிரத்து 240 ஓட்டங் கள் (சராசரி 44.28) குவித்தார்.

இந்நிலையில் தென்னாபிரிக்காவு டனான டெஸ்ட் தொடருக்காக பெங்களூரில் நடந்த உடல் தகுதி சோதனையில் வெற்றிபெற்ற கங்குலி அதன் பிறகு கூறியதாவது,

### தெரியவில்லை

ஒருநாள் போட்டியில் கடந்த ஆண்டில் மட் டும் கிட்டத்தட்ட ஆயிரத்து 300 ஓட்டங்கள் எடுத்தேன். இருப்பினும் அணியில் இருந்து நீக்கப்பட்டேன். அணியில் இடம்பிடிக்க இதை விட வேறு என்ன செய்ய வேண்டும் என்பது உண்மையிலேயே எனக்கு தெரியவில்லை. தவிர, அப்போது நான் நல்ல போர்மில் இருந் தேன். ஒருநாள் போட்டியில் சிறப்பாக ஆடிக் கொண்டிருந்த போதிலும், நீக்கப்பட்டது வேதனை தருகிறது. இந்திய பிரீமியர் லீக் போட்டியில் ஜொலித்தால், அணியில் இடம் பெற முடியுமா என்பது தெரியவில்லை.

வருகிற 14ஆம் திகதி ஆரம்பமாகும் தியோடர் கோப்பைக்கான போட்டியில் விளை யாட இருக்கிறேன். தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட் தொடருக்கு பயிற்சிப் போட்டியாக இதை கருதுகிறேன். தென்னாபிரிக்க தொடர் முக் கியத்துவம் வாய்ந்தது. சமீப காலமாக நாம் டெஸ்ட் போட்டியில் சிறப்பாக விளையாடி வருகிறோம். தென்னாபிரிக்காவுடனும் அதே போல் செயல் பட்டால் நன்றாக இருக்கும்.

இந்திய பிரீமியர் லீக் 20 ஓவர் போட்டி முற் றிலும் புதுமையானது. இந்த போட்டியில்



விளையாட ஆவலாக இருக்கிறேன். சர்வதேச வீரர்களுடன் இணைந்து விளையாட இளை ஞர்களுக்கு இது ஒரு அற்புதமான வாய்ப்பு. இதன் மூலம் அவர்கள் நிறைய கற்றுக் கொள்ள முடியும் இவ்வாறு கங்குலி கூறினார். (5)

# ஹர்பஜன் மீது ஐசிசி விசாரணை

(டுபாய்)

அவுஸ்திரேலிய வீரர்கள் பற்றி இந்திய பந்துவீசசாளர் ஹர்ப்ஜன் சிங் கூறிய கருத் துக்கள் குறித்து சர்வதேச கிரிக்கெற் சபை (ஐ.சி.சி.) விசாரணை நடத்தி வருவதாக கூறப் படுகிறது. அவுஸ்திரேலியாவிலிருந்து இந் தியா திரும்பிய ஹர்பஜன்சிங், அவுஸ்தி ரேலிய வீரர்கள் மத்யூ ஹைடன் மற்றும் கில் கிறிஸ்ட் குறித்து ஆட்சேபனைக்குரிய கருத் துக்களை தெரிவித்திருந்தார்.

ஹர்பஜன் சிங்கின் இக்கருத்து மூலம் இரு நாட்டுக்கு இடையேயான உறவை பாதிக்கும் வகையில் வளர்ந்து விடாமல் தடுக்கும் வகை யில் சர்வதேச கிரிக்கெற் சபை இது தொடர் பாக விசாரணை நடத்தி வருவதாக கூறப்படு கிறது.

போட்டி நடுவர்கள் மைக் பிராக்டர் மற்றும் ஜெப் குரோவ், ஹர்பஜன் சிங் அவதூறான வகையில் பேசக் கூடாது என்று நிபந்தனை விதித்திருப்பதாகவும் தெரிகிறது. (5)

ஈனமுடைய செலவுகள் தாம்-நம் பணப்பை யைக் காலி செய்து விடுகின்றன.

-பெல்ஜியம்

வலம்புரி

## விலை அதிகரிப்புப் பற்றி இம்மியும் கவலை கொள்ளாத அரசு

கோதுமைமா மற்றும் எரிபொருளின் விலை யை மீண்டும் உயர்த்துவதற்கான ஏற்பாடுகளில் அரசு ஈடுபட்டிருப்பதான செய்தி அதிர்ச்சி தருவ தாகவுள்ளது.

கோதுமைமா மற்றும் பெற்றோல் ஆகியவற் றின் விலை கடந்த சில வாரங்களுக்கு முன்னர் அதிகரிக்கப்பட்டிருந்தது.

தற்போது யாழ்ப்பாணத்தில் ஒருகிலோ கோது மைமாவின் விலை, ரூபாய் எண்பத்தொன்றாக விற்பனை செய்யப்படுகின்றது.

ஓர் சாதாரண ஏழைக் குடும்பம் எண்பத் தொரு ரூபாயிற்கு ஒரு கிலோ கோதுமை மாவை வாங்கி சீவியம் நடத்துவதென்பது முடியாத காரியம்.

எண்பத்தொரு ரூபாயே அதியுச்சமானதென மக்கள் அழுது புலம்பும் நிலையில் மீண்டும் விலை ஏற்றமென்றால் என்ன செய்ய முடியும்?

யுத்த செலவை ஈடுசெய்வதற்காக அரசு அத் தியாவசிய உணவுப் பொருட்களுக்கு அடிக்கடி விலையை உயர்த்தி வருகின்றது. பொருளாதா ரக் கொள்கைகள்,கோட்பாடுகள் என்பனவற் றிக்கு எவ்வித முக்கியத்துவமும் வழங்காமல் எழுந்தமானமாக அரசு நடந்து கொள்கிறது.

ஆட்சிப் பீடங்களில் இருப்பவர்கள் ஏழை மக் களின் வாழ்வியல் பிரச்சினைகளை முதலில் அறிந்து கொள்ள வேண்டும்.

நான் சகல வசதிகளுடனும் வாழ்கிறேன் என் பதற்காக,எல்லோரும் அந்த வசதிகளைப் பெற் றுக் கொள்கின்றனர் என எண்ணுவது அறியா மை மட்டுமன்றி அதனால் மக்கள் பெரும் கஷ் டங்களையும், துன்பங்களையும் அனுபவிக்க நேரிடும்.

ஜனநாயகம் என்பது மக்களால் மக்களுக் காக அமைக்கப்படும் மக்களாட்சியாகும். ஆக, மக்களால் தெரிவு செய்யப்படும் மக்கள் பிரதி நிதிகள் நாடாளுமன்றத்தில் கூடி மக்கள் நலன் கள் பற்றி ஆராய்ந்து அவற்றை மேம்படுத்துவதற் கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண் டும்.

ஆனால், இலங்கை நாடாளுமன்றத்தில் மக் கள் நலன் பற்றிய பேச்சுக்கே இடமில்லை. மாறாக ஐ.நா.சபையை வெளியேற்ற வேண்டும், அரசு சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுக ளைநிறுத்த வேண்டும், சமாதான முயற்சியில் ஈடு பட்ட நோர்வேயை துரத்த வேண்டும் என்பதே கோஷங்களாகவுள்ளன.

இவை நாடாளுமன்றத்தில் இடம்பெறும் போது வெளியிடங்களில் நடைபெறும் அரசியல் கூட்டங்களில் இந்தியாவின் உற்பத்திப் பொருட் களை புறக்கணிப்போம். உலக நாடுகளிடம் நாம் கையேந்த மாட்டோம். மிகவிரைவில் விடு தலைப் புலிகளின் பகுதிகளை மீட்டெடுப்போம் என்ற கொக்கரிப்புகள் இடம்பெறுகின்றன.

இவையெல்லாம் பேச்சுக்களாக இருக்க நாளொரு வண்ணம் பொருட்களின் விலை அதிகரித்த வண்ணமுள்ளது.

ஏழை மக்கள் ஒரு நேர உணவுக்காக பாடாப் படும்போது, அரசியல்வாதிகள் செருக்குக் கதை யிலும், பொறுப்பற்ற முறையிலும் நடந்து கொள் வது எவ்வகையிலும் ஏற்புடையதல்ல.

இது தொடர்பில் பொதுமக்கள் வருங்காலத் திலாவது தெளிந்த சிந்தையுடன் செயலாற்ற வேண்டும்.

# அதட்டிக் கேட்கவேண்டிய நேரத்தில் கூட தமிழக அரசு அடக்கியே வாசிப்பது ஏன்

அதட்டிக் கேட்கவேண்டிய நேரத்தில் கூட அடக்கியே வாசிப்பது ஏன்? 'மாறட்டும் அணுகுமுறை' என்ற மகுடத்தின் கீழ் தினமணி இலங்கைத் தமிழர் பிரச்சினை, தமிழக மீனவர் பிரச்சினை தொடர்பில் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள் ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கச்சத்தீவு அருகே இம் மாதம் 5ஆம் திகதி கடலில் மீன் பிடித்துக் கொண்டி ருந்த இந்திய மீனவர்கள் துப் பாக்கியால் சுடப்பட்டதையும் அதில் கிறிஸ்டி என்பவர் இறந்ததையும் சுட்டிக்காட்டி பிரதமர் மன் மோகன் சிங்குக்குக் கடிதம் எழுதியிருக் கிறார் தமிழக முதல்வர் கருணாநிதி.

இதுபோல அடிக்கடி நிகழ்த்தப்படும் துப்பாக்கிச் சூடு சம்பவங்களால் தமிழக மீனவர்கள் அச்சப்படுவதையும், பாது காப்பற்ற நிலையில் இருப்பதையும் அதில் தவறாமல் குறிப்பிட்டிருக்கிறார். அதேகடிதத் தில், 62 தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை பிடித்துச் சென்றுள்ளதையும் மறக் காமல் நினைவுபடுத்தியிருக்கிறார்.

இந்தியாவின் மேற்கில்தான் நிரந்தர வைரியான பாகிஸ்தான் இருக்கிறது. குஜராத் மாநில மீனவர்கள்தான் அடிக்கடி கடலில் எல்லை எது என்று தெரி யாமல் பாகிஸ்தான் பகுதிக்குச் சென்று பிடிபடு கிறார்கள். அவர்களைக் கூட பாகிஸ்தான் இப்படி சுட்டு பிணமாகவோ, குற்றுயிரும் குலை உயிருமாகவோ அனுப்புவதில்லை.

கடல் எல்லையை மீறுகிறவர்களைக் கைது செய்யவும் தண்டிக்கவும் சர்வ தேசச் சட்டங்களின் படி வழிகள் இருக் கும் போது இலங்கை கடற்படையினர் அல் லது அவர்களுடைய ஆசியைப் பெற்ற வர்கள் இப்படி அக்கிரமமாக நடக்கும் போது இந்திய அரசு மெத்தனமாக இருப் பது வேதனையைத் தருகிறது.

சர்வதேச விவகாரங்களில் கூட சட்ட ப்படியும் நியாயப்படியும் நடந்து கொள்ள நமது அரசு தயங்குவது ஏன்? தமிழ் நாட்டு மீனவர்களைவிட இலங்கை அர சின் உறவு பெரிதாகப்போய்விட்டதா? என்ற கேள்விகள் நமக்குள் எழுகின்றன.

நம்முடைய ஆதங்கம் எல்லாம் ஆசி யாவிலேயே மிகப் பெரியநாடு, வளர்ந் துவரும் பொருளாதாரப் புலி என்றெல் லாம் நம்மை நாமே பாராட்டிக்கொள்கி றோமே. நம்மை ஒரு நாடாகக் கூட இலங்கை மதித்ததைப்போலத் தெரியவில் லையே என்பது தான்.

தமிழக முதல்வர் நாளொரு கவிதை பொழுதொரு கடிதம் என்று எழுதி தன்னு டைய பேனா வலிமையை காட்டுகிறாரே தவிர இத்தனை ஆண்டுகள் அரசிய லில் இருந்ததற்கான அனுபவ முதிர்ச் சியையும் மத்திய அரசியலில் தனக்கி ருக்கும் செல்வாக்கையும் இலங்கைப் பிரச்சினையில் தமிழினத்துக்கு நியாய மாகக் கிடைக்க வேண்டிய உரிமைகளை யும் இந்திய அரசின் பார்வையில் தமி ழகம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு முக்கியத்துவத்தையும் பெற்றுத் தருவ தில் காட்டுவதில்லையே என்பது தான் நமது ஆதங்கம்.

காவிரி, பாலாறு, முல்லைப் பெரி யாறு விவகாரங்களில் தான் நாட்டின் ஒற்றுமை சிதைந்துவிடும் என்று நிதான மாக அணுக நினைக்கிறோம் என்று சமா தானம் செய்து கொண்டாலும் இலங் கையை அதட்டிக் கேட்க வேண்டிய நேரத் தில் கூட அடக்கியே வாசிக்க நினைப்பது ஏன்?

இலங்கைப் பிரச்சினையைப் பொறுத் தவரை திமுகவின் அணுகுமுறை ஆரம் பம் முதலே தெளிவாக இல்லாமல் இருப் பது தான் இன்றைய நிலைமைக்குக் காரணம் என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுவதில் நியாயமில்லாமல் இல்லை. இந்தியா திரும்பும் அமைதிப்படையை வரவேற்கப் போக மாட்டேன் என்று பிடி வாதம் பிடித்தது முதல் இப்போது இலங் கைப்பிரச்சினையில் பட்டும் படாமலும் இருப்பது வரை திமுகவின் அணுகுமுறை மற்றவர்கள் குறைகூறும்படி இருப் பதற்கு முக்கியமான காரணம் தெளிவின் மையோ என்கிற சந்தேகம் எழுகிறது .

தமிழீழப் போராளிகளை ஆதரிப்பது விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக இருப் பது போன்றவைதான் தெளிவு என்று சொல்லவில்லை. இலங்கை சம்பந்தப் பட்ட விஷயங்களில் இந்திய அரசின் வெளிநாட்டுக் கொள்கையை வழிநடத் தும் தார்மிக உரிமையும், தமிழக முதல் வர் என்ற முறையில் கடமையும் அவ ருக்கு உண்டு. மத்திய அரசின் கொள்கை தான் எங்கள் கொள்கை என்று சொல் வதை விட்டு விட்டு மத்திய அரசு இந்த விஷயத்தில் எத்தகைய கொள்கையை வகுக்க வேண்டும் என்று தீர்மானிக்கும் பொறுப்பை அவர் ஏற்க வேண்டும்.

ராஜராஜ சோழனைப் போலவே இலக் கியமும் வரலாறும், ஏடும் நாடும் தன்னை ஏற்றிப் புகழ வேண்டும் என்று எதிர்பார்க் கும் தமிழக முதல்வர் கருணாநிதி மீன வர்களின் துயரம் துடைக்கப்படாம லேயே தொடர்வதற்கு தானும் ஒரு முக் கிய காரணம் என்பதை வரலாறு பதிவு செய்யும் என்பதை மறந்துவிடக்கூடாது.

வங்காள விரிகுடாவில் உள்ள கடல் மீனவர் குருதியால் முழுவதும் செங்க டலாக மாறிய பிறகுதான் சர்வதேச கவ னம்இதன்பால் திருப்பப்படும் போலத் தெரிகிறது. (அ-5)

# இலங்கையில் சித்திரவதைகள் பரவலாக இடம்பெறுகின்றன

## ஐ.நா.வின் விசேட தூதுவர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையில் தற்போதும் சித்திர வதைகள் பரவலாக இடம்பெறுகின்றன. அரசாங்கத்தின் அவசரகாலச் சட்டம் இதனை ஊக்குவிப்பதாக சித்திரவதை கள் தொடர்பான ஐ.நா.வின் விசேட தூது வர் மான் பிறெட் நொவெக் குற்றம் சாட்டி யுள்ளார்.

ஜெனீவாவில் நடைபெற்று வரும் ஐ. நா.மனித உரிமை கவுன்சிலில் 7ஆவது கூட்டத் தொடருக்கு சமர்ப்பித்துள்ள அறிக் கையிலேயே நொவெக் இக் குற்றச் சாட்டை முன்வைத்துள்ளார்.

சித்திரவதைகள் தொடர்பான ஐ.நா. வின் விசேட தூதுவர் மான்பிறெட் நொவெக் கடந்த வருடம் ஒக்டோபர் முதல் வாரம் இலங்கைக்கு விஜயம் மேற் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள் ளதாவது,

சித்திரவதைகள் தொடர்பாக அதிக எண்ணிக்கையான அடிப்படை உரிமை மீறல் வழக்குகளை உயர் நீதிமன்றம் விசாரணைக்காக ஏற்றுள்ளது.

இதேவேளை, இலங்கை மனித உரி மைகள் ஆணைக்குழுவிலும் இது தொடர்பான பல முறைப்பாடுகள் செய் யப்பட்டுள்ளது. இலங்கையில் சித்திர வதைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வரு கின்றன. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கும் இது தொடர் பான முறைப்பாடுகள் நாளாந்தம் கிடைத்த வண்ணம் உள்ளன.

சித்திரவதைகளை தடுப்பதற்கு அர சாங்கம் பல்வேறு சட்ட நடவடிக்கை களை எடுத்து வருகின்றது. எனினும் அவசரகால சட்டத்தை அமுல் படுத்தல் போன்ற அரசாங்கத்தின் சில நடவடிக் கைகள் அவற்றை ஊக்குவிப்பதாக உள் ளன. சித்திரவதைகள் உள்ளிட்ட மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்து வதற்கு இலங்கையில் ஐ. நா.வின் மனித உரிமை கண்காணிப்பு அமைப்பை நிறுவு வது சிறந்த பெறுபேற்றைக் கொடுக்கும் என்றார். (அ-5)

# பெரியோரைப் போற்று; நீ நீடூழி வாழ்வாய்

'பிள்ளைகளே உங்கள் பெற்றோ ருக்கு கீழ்ப்படியுங்கள் . ஆண்டவரின் அடியாருக்கு இதுவே ஏற்புடையது. உன் தந்தையையும் தாயையும் மதித்து நட இதனால் நீ நலம் பெறுவாய். மண்ணுல கில் நீடூழி வாழ்வாய். (எபே. 6:1-3)

கீழ்ப்படிவு என்பது சமுதாயத்தின் பல மட்டங்களிலும் இன்று கேள்விக் குறி யாகவும், பெரும் சவாலாகவும் முன் நிற்கிறது.

## தவக்காலப் பொழிவு

பெற்றோரை அலட்சியம் செய்தல், ஆசிரியர், பெரியோரின் அறிவுரைகளை உதாசீனம் செய்தல், தொழில் ஸ்தாபனங் களில் அதிகாரிகளுக்குப் பணிவின்மை, சமுகத்தில் மூத்தோரின் பட்டறிவை உள் வாங்காது ஏளனம் செய்தல் என்பனவே பல சமூகச் சீரகேடுகளுக்கும் சமுதாய பிறழ்வுகளுக்கும் காரணியாய் உள் ளன.

இவ்வாறான பெரியோர்கள் பல அனு பவங்களையும் சவால்களையும் தாண்டி வந்தவர்கள் . இவர்களின் புத்திமதிகள் இளைய சமுதாயத்தின் வாழ்வை நெறிப்படுத்தி வளப்படுத்தக் கூடியவை.

சினிமா மற்றும் ஊடகங்கள் மக்களை ஈர்த்து திசை திருப்பி உள்ளங்களைக் கடி னப்படுத்துகின்றன. பெற்றோர் உறவு கள் மீதான பாசமும் மதிப்பும் அருகிப் போகின்றன. சினிமாக் கலாசாரம் வாழ் வாக்கப்படுகிறது. இந்த நிலை எதிர்கால சந்ததிக்கு ஆரோக்கியமானதல்ல.

பல வயோதிபப் பெற்றோர் கைவிடப் பட்டநிலையில் பாசத்திற்காக, ஆறுதலுக் காக ஏங்கும் இன்றித் தனிமையில் வாடு கின்றனர். இவர்கள் இல்லாமல் இளைய தலைமுறை எவ்வாறு உருவாகியது. வளமாகியது. அவர்களின் தியாகம் அளப் பரியது. இயேசு தன் முப்பது வயது மட் டும் பெற்றோருடன் பணிவுடன் அமைதி வாழ்ந்து வந்தார். கானாவூரில் தனது தாயின் வேண்டுகோளை ஏற்றுத் தண் ணீரை ரசமாக மாற்றினார்.

குடும்ப அமைப்பின் கட்டுமான முறை களை கற்றுத் தந்த யேசுவின் பாதை யில் இன்றைய இளையோர் பயணித்



தால் வீடும் நாடும் நலம் பெறும். பெரி யோர், பெற்றோர், அறிஞர்களுக்கு மதிப்பளிப் போம். நாமும் மதிப்புப் பெறு வோம். அவர் களின் ஆசி எம்மை நீடூழி வாழவைக்கும். உங்களுடைய முந்தின நடத்தையை மாற்றி தீய நாட்டங்களால் ஏமாந்து அழிவுறும் பழைய மனிதருக் குரிய இயல் பைக் களைந்து விடுங்கள். உங்கள் மனப் பாங்கு புதுப்பிக்கப்பட வேண்டும். (எபே4:22:23)

எஸ்.யேசுதாஸ்

மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# மன்னாரில் நேற்றுக் கடும்...

தாக்குதல்களின்போது விடுதலைப்புலிக ளுக்குச் சொந்தமான எட்டுப் பதுங்குகுழிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தேசிய பாதுகாப் புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவிக் கின்றது.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் விசேட முகாம்கள் மற்றும் பதுங்குகுழிகள் மீதே படையினர் தாக்குதல்களை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில தினங்களாகவே விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் மன்னார் மற்றும் சில பகுதிகளில் மோதல் கள் தொடர்ந்த வண்ணமுள்ளன. இம் மோதல் களின்போது இருதரப்பிலும் பலத்த உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

நேற்று அதிகாலை இடம்பெற்ற மோதல் களையடுத்து அப் பகுதியில் படையினரால் கடும் சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளதாகவும் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் மேலும் தெரிவிக் கின்றது. (ச-2)

# இலங்கை...

இந்தியாவின் ஆக்கிரமிப்புக்கு அரசாங்கம் அனுமதியளித்துள்ளது. இந்த நிலை தொடர்ந்தால் தெற்காசியாவில் இந்தியாவின் அடிமை நாட்டுப் பட்டியலில் இலங்கையும் இடம்பிடித்துவிடும்

எரிபொருள் விற்பனையில் விநியோக ஏக போக உரிமையை இந்தியாவுக்கு வழங்குவ தை எதிர்க் கும் தொழிற்சங்கங்களின் நிலைப்பாடு தொடர் பாக அரசியல் கட்சி என்ற ரீதியில் ஜே.வி.பியின் நிலைப்பாட்டைத் தெரிவித்தபோது தொழிற்சங்க மத்திய நிலையத்தின் தலைவரும் எம்.பியுமான கே.ரி. லால் காந்த இவ்வாறு தெரிவித்தார். (ச)

# வெள்ளவத்...

கவலைக்கிடமாகவிருப்பதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பு காலி பிரதான வீதியில் அமைந் துள்ள வெள்ளவத்தைப் பகுதியில் ரொக்ஸி சினிமா திரையரங்குக்குப் பிரதான பாதை யின் நடுவே நடைபாதையிலுள்ள பூச்சாடி ஒன்றினுள் மறைத்து வைக்கப்பட்ட சக்தி மிக்க குண்டே வெடித்ததாக இராணுவப் பேச் சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரி வித்தார்.

இக் குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர் பாக இராணுவத்தினரும் பொலிஸாரும் புலன் விசாரணைகளை நடத்தி வருவதாகத் தெரி வித்துள்ளார். (ச-2)

# மின்வெட்டு...

நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். காங்கேசன்துறை சூல் எயர் நிறுவ னத்தின் சேர்குயிற் பிறேக்கர் (Circuit Breaker) பழுதடைந்துள்ளதால் அங்கிருந்து மின்சாரத் தை பெறமுடியாதுள்ளது.

அம் மின் பிறப்பாக்கியின் நிறைவேற்றுப் பொறியியலாளர் அதனைத் திருத்துவதற்கு முயற்சித்தும் அத்திருத்தங்களை மேற்கொள்ள சில நாள்கள் செல்லலாம் என்று தெரிவித் துள்ளார். இதற்கிடையில் இதனை ஈடுசெய்ய அவ் உபகரணத்தைக் கொழும்பில் இருந்து அனுப்பி வைக்குமாறு கேட்டுள்ளதாகவும் யாழ் ப்பாணம், இலங்கை மின்சார சபை பிரதிப் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். (ச-ஓ)

# யாழ்ப்பாண அதியுயர் பாது...

யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதியால் நிய மிக்கப்படும் ஒருவரையும் பாதுகாப்பு அமைச் சினால் நியமிக்கப்படும் ஒருவரையும் கொண்ட குழுவினர் இம் 3 ஆயிரம் குடும்பங்களின தும் விண்ணப்பங்களை பரிசீலித்து அவர்க ளை உடனடியாக மீளக்குடிய மர்த்துமாறு பிர தம நீதியரசர் சரத் என்.சில்வா, நீதியரசர்களான காமினி அமரதுங்க மற்றும் பாலபட்ட பெந்தி ஆகியோரைக் கொண்ட நீதியரசர்கள் குழு உத்தரவிட்டது.

மனுதாரர்களான மாவை.சேனாதிராஜா சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.கனகேஸ் வரனுடன் சிரேஷ்ட சட்டத்தரணிகளான வி.எஸ். கணேசலிங்கம் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகி யோரும், விவசாயியான காசிப்பிள்ளை யோ கேஸ்வரன் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தி, சட்டத்தரணி தனபாலசிங்கம் ஜனகனுடன் ஆஜராகினார்.

அரசு சார்பில் சிரேஷ்ட அரச சட்டத்தரணி ரட்ணதிலக ஆஜரானார். (ச-2,5)


## க.பொ.த உயர்தரம் -2007

BOC

இலங்கை வங்கி

உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி

## 3A சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிப்பு

இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து 2007-க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 3A சித்தி பெற்ற யாழ். குடாநாட்டு மாணவர்களை கௌரவிக் கும் நிகழ்வும், இலங்கை வங்கியின் அனுசரணையில் மாணவர்களின் பெயரில் 18+ சேமிப்புக் கணக்கு ஆரம்பித்தலும்.

### 3A சித்தி பெற்ற அன்பு மாணவர்களே

★உங்களுக்கு அருகாமையிலுள்ள இலங்கை வங்கிக் கிளையில் உங்கள் பரீட்சைப் பெறுபேற்றை உறுதி செய்து உங்களுக்கான சேமிப்புக் கணக்கை ஆரம்பியுங்கள். ஆரம்ப வைப்புத் தொகையை இலங்கை வங்கி செலுத்திக் கொள்ளும்.

★உங்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இம்மாதம் 15ஆம் திகதி யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை 8.30 மணிக்கு இடம் பெறும்.

★உங்கள் கௌரவிப்பு நிகழ்வில் நீங்கள் கலந்து கொள்வதை உறுதி செய்ய சேமிப்புக்கணக்கை ஆரம்பிக்கும் இலங்கை வங்கிக் கிளையின் முகாமையாளரிடம் உங்கள் பெயரை பதிவு செய்து கொள்ளுங்கள்.

*யாழ்.அரச அதிபர், இலங்கை வங்கி அதிகாரிகள், யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் கல்வியியலாளர்கள் கலந்து சிறப்பிக்கும் உங்கள் கௌரவிப்பு நிகழ்வில்;*

☞உங்கள் எதிர்கால கல்விச் செயற்பாட்டிற்கான வழிகாட்டல்

☞தகவல் தொழில் நுட்பத்திறன் சார் கருத்துரைகளும் புலமை யாளர்களால் வழங்கப்படும்.

உங்களை அன்புடன் வரவேற்கின்றோம்.


# மட்டு. உள்ளூராட்சித் தேர்தல்...

கிழக்கு மாகாணம் தமது கட்டுப்பாட்டின் கீழ் முழுமையாகக் கொண்டு வரப்பட்டுள்ள தாக அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட பின் மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 வருடங்களுக் குப் பின்பு ஒரு மாநகர சபை உட்பட 9 உள் ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடை பெற்று முடிந்துள்ளது.

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நடை பெற்று முடிந்துள்ள இந்தத் தேர்தலில் 101 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவிருக்கின் றார்கள். 6 அரசியல் கட்சிகள் 22 சுயேட் சைக் குழுக்களைச் சேர்ந்த 831 வேட்பாளர் கள் போட்டியிடுகின்றார்கள்.

தேர்தலையொட்டி மாவட்டத்தில் மேற் கொள்ளப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் காரணமாக மக்களின் வழமைநிலை பாதிக் கப்பட்டிருந்ததாகவும் இதன் காரணமாக வாக் காளர்கள் பாதுகாப்புக் கெடுபிடிகளை எதிர் நோக்கியதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பலத்த பாது காப்புக்கு மத்தியில் 14 வருடங்களின் பின்பு மட்டக்களப்பு மாநகர சபை உட்பட 9 உள்ளூ ராட்சி சபைகளுக்கான வாக்களிப்புநேற்று இடம்பெற்றது.

தேர்தல் வாக்களிப்பின்போது பாதுகாப் புக் காரணங்களுக்காக சில வீதிகள் மூடப்பட்ட துடன் வீதித் தடைகள் மற்றும் சோதனைகள் காரணமாக வீதிகளில் மக்கள் நடமாட்டமும் வாகனப் போக்குவரத்தும் நேற்றுக் குறைந்து காணப்பட்டமையினால் வழமை நிலை பாதிக் கப்பட்டிருந்தது.

வாக்களிப்பைப் பொறுத்தவரையில் நேற்று நண்பகல் வரை மந்த நிலை காணப் பட்ட போதிலும் நண்பகலுக்குப் பின்னர் வாக் களிப்பு நடவடிக்கைகள் முன்னேற்றமடைந்து காணப்பட்டதாக தேர்தல் அதிகாரிகள் தெரி வித்துள்ளனர்.

வாக்குச்சாவடிகளுக்கு வெளியே பொலிஸாரும் இராணுவத்தினரும் மற் றும் விசேட அதிரடிப் படையினரும் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட் டிருந்தனர். வாக்களிக்கச் சென்றவர்கள் வாக்குச்சாவடிக்குச் செல்ல முன்னர் பொலி ஸாரின் சோதனையின் பின்னரே உட்செல்ல அனுமதிக்கப்பட்டதாகப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதுவரை காலமும் இடம்பெற்ற தேர்தல் களில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவ டிக்கைகளை விட இம்முறை கூடுதலான சோதனை நடவடிக்கைகளுக்கு மத்தியில் வாக் களித்ததாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

வாழைச்சேனைப் பிரதேச சபையில் போட்டியிடும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் ஒருவரின் வீட்டின் மீது நடத்தப் பட்ட கைக்குண்டுத் தாக்குதலைத் தவிர வேறு எந்த அசம்பாவிதங்களும் இடம்பெறவில் லை எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாழைச்சேனைப் பிரதேசத்தில் அரச பின்புலத்துடன் சில தேர்தல்கள் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாகத் தேர்தலைக் கண் காணிக்கும் தன்னார்வத் தொண்டர் அமைப் பான பவ்ரல் அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் அருட் தந்தை சிறி தரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பெருமள வில் இந்தத் தேர்தலில் அக்கறை கொண்ட வர்களாகக் காணப்படவில்லை. ஒரு சில பகு திகளில் மக்கள் தமது வாக்குகளை அளிப்ப தில் அக்கறையுடையவர்களாகவும் மறுபகுதி மக்கள் தமது வாக்குகளை மந்தகதியில் அளித்தும் வந்துள்ளனர்.

சில தேர்தல் வாக்களிப்பு நிலையங்களில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் மக்களின் சுதந்திரமான வாக்களிப்புக்குத் தடையாக அமைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. மட்டக் களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற தேர்தலில் 56 சதவீதத்துக்கும் மேற்பட்ட வாக்குகள் பதி வாகியுள்ளதாக மாவட்டத் தேர்தல் அத்தாட்சி அலுவலர் சுந்தரம் அருமைநாயகம் தெரி வித்துள்ளார். வாக்குகளை எண்ணும் நடவ டிக்கைகள் நேற்றிரவு ஆரம்பிக்கப்பட்டது. எனினும் இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை எந்தவித உத்தியோகபூர்வ முடிபுகளும் அறி விக்கப்படவில்லை. (ச-2,5)


# பாடிய அடியார்களுக்கு நாடியது கிடைக்கட்டும்

காரைநகர் திக்கரை முருகன் திருமுன்றலிலே பெருமானின் பெருஞ்சாந்தி விழாவை முன்னிட்டு தைப்பூச நன்னாளிலிருந்து ஓத ஆரம்பித்த பன்னிரு திருமுறைகளின் பூர்த்தி ஐயனின் மண்டலாபி ஷேகப் பூர்த்தியுடன் (11.03.2008)இந் நன்னாளில் நிறைவுறுகின்றது.

திருநாரையூர் பிள்ளையார் தந்த திருமுறைகள் பன்னிரண்டும் நமது அருங்காரையூர் களபூமிப்பிள்ளையார் ஆலயத்திலிருந்து சகல மரியாதைகளுடன் எடுத்து வரப்பட்டு இங்கே ஓதி வரப்படக் கிடைத்தது திருமுறை நாயகன் தில்லைக்கூத்தனின் திருவருளே.

திக்கரை முருகன் பெருஞ்சாந்தி காணும் இந்த நன்னாளில், பந்த பாசங்களில் சிக்கித் தவிக்கின்ற சீவன்களை, சிவனுடன் சேர்த்து வைக்கக் கூடிய இப் பன்னிரு திருமுறைகளை நாளும் பக்தியோடு வந்து ஓதிய வே.சுப்பிரமணியம் (மணியம்), எழுதுமட்டுவாழ், வரத விநாயகர் அவர்களது உதவியாளர் வ.கருணாகரன் (கருணன்), சுட்டி புரம் கண்ணகி அம்மன், ஓதிய பக்தர்கள், ஓதக் கேட்ட பக்தர்கள், திக்கரை வாழ் மக்கள், யாபேருக்கும் அவர்கள் நாடியது கிடைக்கத் தில்லைக்கூத்தன் திருவருளையும், திக்கரை முருகன் பெருவருளை யும் வேண்டிப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

பாடிய அடியார்கள் நாடியது அடைய பரமன் அருளுவான் என் பது திண்ணம்.

வணக்கம்

தில்லைக்கூத்தன்
அடியார்

(C-849)


# கொழும்பில்...

ஒரு தாயிடமும் அவரது மகளிட மும் பொலிஸார் வாக்குமூலங் களைப் பெற்றுள்ளனர். குண்டு வெடிப்பு இடம்பெற்ற இடத்திற்கு கொழும்பு சட்ட வைத்திய அதி காரி யும் அரச இரசாயனப் பகுப்பாய் வுத் திணைக்கள அதிகாரிகளும் சென்று ஆரம்ப கட்ட விசாரணைக ளை நடத்தியதாகத் தெரி வித்துள்ளார். (ச-2)


## பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

பாதுகாப்பு உத்தியோகத்த ராகக் கடமையாற்ற யாழ்.நகர மையத்திலிருந்து 5 கிலோ மீற் றர் தூரத்திற்குள் வதியும் 35 வயதுக்கு மேற்பட்டவர்கள் இன்று பிற்பகல் 2.30 மணிய ளவில் நேரில் வரவும்.

-நிர்வாக உத்தியோகத்தர்

வலம்புரி,
இல.3, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.



# பாராட்டி வாழ்த்துகிறேன்

## 'Raveens' English Medium Classes
## Karaveddy



யாழ்.கல்வி வலயத்திற்குப் புதிதாக வலயக் கல்விப் பணிப்பாளராக

திருமதி அ.வேதநாயகம்

நியமிக்கப்பட்டதனைப் பாராட்டி வாழ்த்துவதுடன் எனது மனமகிழ்ச்சியை யும் தெரிவிக்கின்றேன்.

அவரினது நியமனத்திற்கு பங்களிப்புச் செய்த சகல ருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ப.ஈஸ்வரநாதன்
(முன்னாள் தாவரவியல் வள ஆளணியினர் -வலயம் -2)
யாழ்.ஸ்ரீ நாரதா வித்தியாலயம், கரவெட்டி.
தொலைபேசி இலக்கம் 021 226 3321

(C-818)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ. ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தல் 11.03.2008இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.